2—7—85 1–25

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 27 ஆனி 18 ஷவ்வல 13 இதழ் 142
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 2-7-1985

● நெதர்லாந்தில்

# 3500 இலங்கை தமிழர்களுக்கு

# அகதி அந்தஸ்து மறுப்பு!

(கொழும்பு)

நெதர்லாந்தில் அரசியல் புகலிடம் கோரிய 3500 இலங்கை தமிழர்களுக்கு அந்நாட்டு அரசாங்கம் அகதிகள் அந்தஸ்நு வழங்க மறுத்துவிட்டதாக இலங்கை அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இலங்கையில் தங்களுக்கு பாதுகாப்பில்லையெனக் கூறி இந்த தமிழர்கள் தனித்தனியே விண்ணப்பம் செய்யும்படி கோரப்பட்டிருந்த போதிலும் தற்பொழுது இவர்கள் பாதுகாப்பாக தமது நாட்டிற்குத் திரும்ப முடியும் என நெதர்லாந்து அரசு தெரிவித்துள்ளதாம்.

இதே சமயம் சுவிட்சர்லாந்தில் அரசியல் புகலிடம் கோரியிருந்த 2500 இலங்கைத்தமிழர்கள் 400 பேரின் விண்ணப்பங்களை அந்நாட்டு அரசாங்கம் நிராகரித்து விட்டதாக அறிவிக்கப்பட்டது. இதே போன்று பிரிட்டனில் அரசியல் தஞ்சம் கோரியுள்ள 1500 இலங்கைத் தமிழர்களின் விண்ணப்பங்கள் குறித்து அந்நாட்டு அரசாங்கம் ஆராய்ந்து வருவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. இம்முடிவு இந்தவார இறுதிக்குள் அறிவிக்கப்படுகின்மென்று எதிர் பார்க்கப்படுகிறது.

மேற்கு ஜெர்மனியில் 30 ஆயிரம் இலங்கைத் தமிழர்கள் அரசியல் புகலிடம் கோரியிருக்கிறார்கள் என்று கூறப்படுகிறது.

● கொழும்பு பத்திரிகையாளரைக் கடத்தியவர்கள்

# நன்றாகக் கவனித்து

# பேட்டியும் அளித்தனர்!

## அவரே வெளியிட்ட தகவல்

[கொழும்பு]

இலங்கை அரசு தமிழ்மக்களின் உரிமைகளையெல்லாம் மறுத்து வந்துள்ளமையால் அவ்வுரிமைகளை மீண்டும் பெற்றுக் கொள்வதற்காகத் தாங்கள் போராடி வருவதாகத் தம்மைக் கடத்தியவர்கள் கூறியதாகக் கொழும்பு ஆங்கில தினசரி ஒன்றைச் சேர்ந்த சிரேஷ்ட பத்திரிகையாளரும், அண்மையில் யாழ்ப்பாணத்தில் வைத்துக் கடத்திச் செல்லப் பட்டவருமான திரு. செனில் விக்கிரமநாயக்க கூறியிருக்கிறார்.

தமிழ் மக்கள் அமைதியாகவும், சுதந்திரமாகவும் வாழ்வதற்கான ஒரு தனி நாட்டை உருவாக்கத் தாங்கள் போராடி வருவதாகக் கூறிய அவர்கள், தம்மை மிக நன்றாக நடத்தியதாகவும் கூறியுள்ளார்.

தாம் ஒரு உளவாளி என்ற சந்தேகத்தின்மீதே தம்மைக் கடத்திச் சென்றனர் என்றும், தாம் பத்திரிகையாளன் என்று தெரிந்ததும் நல்லமுறையில் கவனித்து தமக்குப் பேட்டியும் அளித்தார்கள் என்றும் அவர் கூறிள்ளார்.

தாம் குறிப்பெடுத்துக் கொள்வதற்கு ஒரு பயிற்சிப் புத்தகம் தரப்பட்டதாகவும், மொழிபெயர்ப்பாளரும் தந்தார்களாம் தனியாக வராமல் ராணுவத்தினருடன் ஏன் வந்தீர்கள் என்று அவர்கள் கேட்டதாகவும், பத்திரிகையாளர்கள் உண்மைநிலையைக் கண்டு எழுதுவதற்கு தாங்கள் எதிர்ப்பில்லையென்று தெரிவித்ததாகவும் திரு. விக்கிரமநாயக்கா கூறியுள்ளார். பாதுகாப்பு கருதியே ராணுவத்தினருடன் தாம் யாழ்ப்பாணம் வந்துள்ளதாகத் தெரிவித்ததாகவும் கூறியுள்ளார். தம்மைக் கடத்தியவர்கள் ஈ பி ஆர். எல். எப். இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் என்று கூறியதாகவும் தெரிவித்தார்.

## பத்திரிகை ஆசிரியருக்கு சிறை

[சென்னை]

தமிழ்நாடு மாதாந்த பத்திரிகையொன்றின் ஆசிரியர் போல்ராஜ் நேற்று தமிழ்நாடு சட்ட மேலவையினால் மூன்று மாதம் சாதாரண சிறைத் தண்டனை விதிக்கப்பட்டார்.

சபையின் உரிமைகளை மீறியதாக இவர்மீது குற்றஞ்சாட்டப்பட்டது.

## கட்டுவனில் கொள்ளை!

(மாவிட்டபுரம்)

கட்டுவனில் சந்திரசேகரம் என்பவர் வீட்டில் நேற்று முன்தினமிரவு இனந்தெரிய நபர்களினால் 4 லட்சம் ரூபா பெறுமதியான பொருட்களும், நகைகளும் கொள்ளையடித்துச் செல்லப்பட்டுள்ளன.

## கழிவு ஒயில் கொள்ளை

(மாவிட்டபுரம்)

சுன்னாகம் மின்சார சபை அலுவலகத்தில் நேற்று முன்தினம் இரவு 63 பரல் கழிவு ஒயில் இனந்தெரியாத இளைஞர்களினால் கொள்ளையடிக்கப் பட்டுள்ளது.

## தீவிரவாதிகளுடன் பேச்சு நடத்துவது பயனற்றதாம்

### அநுரா கூற்று

[கொழும்பு]

"தமிழ் தீவிரவாதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவது பயனற்ற ஒரு செயலாகும்" என்று கண்டி மாவட்ட ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி அமைப்பாளர்களை உள்ளடக்கிய கருத்தரங்கு ஒன்றில் உரையாற்றிய எதிர்க்கட்சித் தலைவர் திரு. அனுரா பண்டாரநாயக்கா கூறினார்.

தொடர்ந்து அங்கு அவர் பேசுகையில் தீவிரவாதத்தை அடக்கிவிட்டு, அதன் பின்னரே இனப்பிரச்னைக்கான தீர்வினை காண வேண்டும் என்றும் தெரிவித்தார்.

## சுற்றுலா சென்ற மாணவர் இருவர் கடலில் மரணம்

(கொழும்பு)

பேராதனையிலிருந்து மாத்தறைக்குச் சுற்றுலாசென்ற பல்கலைக்கழக மாணவர் இருவர் கடலில் மூழ்கி மரணமானதாகத் தெரியவருகின்றது.

கிரிந்த என்ற இடத்தில் மாணவர் சிலர் கடலில் ஒரு பாறைக் கல்லின் மீது ஏறிப் படம் எடுத்துக்கொண்டிருக்கையில் இருவர் தவறிக் கடலுக்குள் விழுந்ததாகக் கூறப்படுகின்றது. இவர்கள் தமிழரி என்றும் ஒருவர் கணேசராசா என்றும் மற்றவர் ஜெயபரன் என்றும் தெரியவந்துள்ளது. இவர்கள்பற்றிய மேல்விபரம் நேற்று மாலைவரை கிடைக்கவில்லை.

## ஜி. சி. ஈ. (சாதாரணம்) பரீட்சை முடிவுகள் இன்றுதெரியவரும்

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாண பகுதியில் நடந்த ஜி சி ஈ. சாதாரணம்] பரீட்சை முடிவுகள் இன்று வெளியாகும் என எதிர் பார்க்கப்படுகிறது. சில கல்லூரிகளுக்கு நேற்று முடிவுகள் கிடைத்துள்ளதாக கூறப்படுகிறது

85 டிசம்பர் மாதம் நடைபெறவிருக்கும் ஜி சி ஈ. [சாதாரணம்] பரீட்சைக்கான விண்ணப்பம் அனுப்பும் கடைசி தினம் கடந்த மாதம் 30-ம் திகதியாகும்

கடந்த ஜி சி. ஈ. [சாதாரணம்] பரீட்சைக்கு தோற்றி, முடிவுகளை எதிர்பார்த்துக் கொண்டிருந்த மாணவர்கள் கடந்த 30-ம் திகதி டிசம்பர் மாத பரீட்சைக்கான விண்ணப்பத்தை அனுப்பவில்லையெனக் கூறப்படுகிறது

இவர்கள் விண்ணப்பம் அனுப்பவேண்டிய தேதி மேலும் நீடிக்கப்படலாம் என்றும் கூறப்படுகிறது.

## தாதிமார் சட்டப்படி வேலை; நேற்று ஆரம்பித்தனர்!

[கொழும்பு]

அரசாங்க ஆஸ்பத்திரிகளில் தாதிமார் நேற்று சட்டப்படி வேலைசெய்யும் போராட்டத்தை ஆரம்பித்தனர்.

கொழும்பிலும் கண்டி முதலிய முக்கிய பகுதிகளிலுமுள்ள ஆஸ்பத்திரிகளில் நேற்று முதலாம் திகதி தொடக்கம் இந்தப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. வரும் 15-ம் திகதிவரை இது நீடிக்கும் என்று தாதிமாரின் பிரதிநிதிகள் கூறினர்

இவர்களின் கோரிக்கைகளில் ஒன்றான சப்பாத்து வழங்கப்படவேண்டும் என்ற கோரிக்கை நிறைவேற்றப்படாமையினால் தாதிமாரிகள் செருப்புகளுடனேயே பணிக்கு வந்திருந்தனர்.

கோரிக்கைகள் தொடர்ந்தும் வழங்கப்படாத பட்சத்தில் தாதிமார் தொழிற்சங்க நடவடிக்கைகளை தீவிரப்படுத்தப்படும் என்று அறிவிக்கப் பட்டுள்ளது.

[க]

## சீமெந்து ஆலையில் பெரும் தீவிபத்து

(எஸ். ஆர். ஞானசுந்தரம்)

காங்கேசன்துறை சீமெந்து ஆலையில் நேற்று காலை 10 மணிக்கு ஏற்பட்ட தீவிபத்தினால் பெரும் சேதம் ஏற்பட்டது மேற்படி சீமெந்து ஆலை உபயோகத்துக்கென தொழிற்சாலை முன்றலில் குவிக்கப்பட்டிருந்த பல லட்ச ரூபா பெறுமதியான பழைய டயர்களில் திடீர் என மர்மமான முறையில் தீ பிடித்துக் கொண்டது.

உடனடியாக காங்கேசன்துறை சீமெந்து கூட்டுஸ்தாபன சீமெந்து ஆலை தொழிலாளர்களும், பாதுகாப்பு உத்தியோகத்தர்களும் லங்கா சீமெந்து லிமிட்டட் தொழிலாளர்களும் தீயை அணைப்பதில் ஈடுபட்ட போதும் சுமார் 4 மணி நேரமாக தொடர்ந்து பெரும்

(8ம் பக்கம் பார்க்க)

## அதிபர் ஆனந்தராஜனின் பூதவுடல் நேற்றுக் காலை நல்லடக்கம் செய்யப்பட்டது!

[யாழ்ப்பாணம்]

யாழ். சென் ஜோன்ஸ் கல்லூரி அதிபர் திரு. ஈ. ஆனந்தராஜனின் பூதவுடல் சென். ஜோன்ஸ் சேமக்காலையில் நேற்றுக் காலை 11 மணிக்கு நல்லடக்கம் செய்யப்பட்டது.

நேற்றுக் காலை ஜுபிலி மண்

(8-ம் பக்கம் பார்க்க)

# அபிளம்பரம்

## விற்பனைக்கு

செம்பு, பித்தளை, அலுமினிய கழிவுகள் உயர்விலைக்குப் பெறப்படும். பிள்ளையார் மெற்றல் வேக்ஸ், 257, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 4031

பூரண விளைத்திறனுடைய பம்பாய் வெங்காய விதை விற்பனைக்குண்டு கிலோ ரூபா. 250/- பிள்ளையார் மெற்றல் வேக்ஸ், 257, காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம். 4030

## விற்பனைக்கு

யாழ்ப்பாணக்கல்லூரி வீதி / கனகரத்தினம் வீதிக்கு சமீபமாக 1½ பரப்பு நிலம் நல்ல தண்ணீர் கிணற்றுடன் விற்பனைக்குண்டு பாலேந்திரா, C/o க. குலசேகரம், கல்லூரி லேன், வட்டுக்கோட்டை. 4153

மினி தியேட்டருக்குப்பாவிக்கும் T V. லென்ஸ் 42 அங்குலம், 30 அங்குலம் விற்பனைக்குண்டு. உடன் தொடர்பு கொள்ளவும்: மினி ரேற் சென்டர் J. M. C. பில்டிங், கிறான்லி றோட். 4155

## தேவை

தெல்லிப்பளையிலுள்ள பிரபல நெசவு நிலைத்திற்கு, விண்ணப்பிக்கும் தொழிலில் குறைந்தது 02 வருட அனுபவமுள்ளவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

(1) மின்தறி மேற்பார்வையாளர் (பெண்)
(With Knowledge in Typing and Accounts)
(2) மின்தறி மெக்கானிக் (ஆண்)
(3) மின்தறி நெசவாளர்கள் (பெண்கள்)

விண்ணப்பங்கள் 08-07-1985 அன்று அல்லது அதற்கு முன் கிடைக்கக்கூடியதாக கீழ் தரப்பட்ட விலாசத்திற்கு அனுப்பப்படல் வேண்டும்.

முகாமையாளர்,
தெல்லிப்பளை மின்தறி நெசவு நிலையம்,
C/o தெல்லிப்பளை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்,
தெல்லிப்பளை. 4157

உ
சிவமயம்

## திருமண அழைப்பு

நிகழும் குரோதன வருஷம் ஆனித் திங்கள் 22-ம் நாள் (06-07-85) சனிக்கிழமை காலை 7-30 மணி முதல் 8-00 மணிவரையுள்ள கடகலக்கின சுபமுகூர்த்தத்தில்

| எமது புத்திரன் திருநிறை செல்வன் **பாலசுந்தரம்** அவர்களுக்கும் | எமது ஏக புத்திரி திருநிறை செல்வி **செல்வராணி** அவர்களுக்கும் |
|---|---|

மணமகள் இல்லத்தில் திருமணம் செய்து வைக்கப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

தனிப்பட்ட அழைப்புக்கள் இல்லை.
இங்ஙனம்
தங்கள் நல்வரவை நாடும்,

| க. ஞானசுந்தரம் தம்பதிகள் 461, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். | க. செகராஜா தம்பதிகள் அச்செழு, நீர்வேலி. |
|---|---|

(அன்பளிப்புக்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.) 4126


ரெருசோ ஷிப்ஸ்
# TERRAZZO CHIPS
IMPORTED

★ கலர் பவுடர் (எல்லா வர்ணங்கள்) (GERMAN AND HOLLAND)
★ அலுமினியம் தகடுகள் (18g x 16g)
★ வெள்ளைச் சிமெந்து
★ காபரண்டம் கற்கள் (FLOOR CUTTING STONE)
★ TERRAZZO மற்றும் தரைக்குத் தேவையான சகல பொருட்களும் கிடைக்குமிடம்
Rs. 6/75-க்கு மேல்

## றம்சன்ஸ்
443, பழைய சோனகத் தெரு,
கொழும்பு-12
தொலைபேசி: 34411 — 31511


## நடவடிக்கை எடுக்கப்படும்

(கொழும்புத்துறை)

சட்ட விரோத கள் விற்பனையை தடுக்கும் முகமாகப் பூநகரி தெங்குடனம் பொருள் கூட்டுறவுச் சங்கம் கடும் நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளது.

சங்கத்தின் எல்லைக்குள் அனுமதியில்லாமலும் சங்கத்தால் மரங்களுக்கு இலக்கமிடப்படாமலும் தமக்குச் சொந்தமான தென்னை, பனை மரங்களிலிருந்து கள் சீவுவதற்குச் சீவல் தொழிலாளர்களை அனுமதிக்க வேண்டாமென்று சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இவ்வேண்டுகோளை மீறி நடந்து கொள்ளும் மரச் சொந்தக்காரர்கள் மீது கலால் பகுதியினர் மூலமாகச் சட்ட நடவடிக்கை எடுக்கப் படும் என்றும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

## விற்பனைக்கு

நாயன்மார்கட்டு இராமநாதன் வீதியில் 1½ பரப்புக் காணி நல்ல தண்ணீர்க்கிணற்றுடன் உடனடியாக விற்பனைக்கு உண்டு தொடர்பு கொள்க: K. சதானந்தன் மே/பா செல்வம், ஆஸ்பத்திரி முன் ஒழுங்கை, நாயன்மார் கட்டு. 4154

Stop பிறேக் ஒயில் விற்பனைக்குண்டு. வர்த்தகர்கள் விசேடசலுகைக்குத் தொடர்பு கொள்ளவும்: ட்றேட் சென்ரர், Home Finance Ltd., 155, மானிப்பாய்வீதி. யாழ்ப்பாணம். 2862

## மணப்பந்தல்

22 வயதுடைய நல்லொழுக்கம் கொண்ட மகளுக்கு படித்த அரசாங்க உத்தியோகம் உள்ள பத்தர் குலத்தை (Gold Smith) சேர்ந்த வரனை (மணமகன்) பெற்றோர் தேடுகின்றனர். வெளிநாட்டில் இருந்து வந்திருக்கும் நல்லொழுக்கமுடைய (செவ்வாய்க் குற்றமுள்ள) படித்தமகனுக்கு நல்லொழுக்கமுடைய மணமகளை பெற்றோர் தேடுகின்றனர். விபரம், குறிப்பு, முழுப் படமுடன் அனுப்பவும் தொடர்பு:விளம்பர இல, 4150, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 4150

## இன்று நான்காண்டு நினைவஞ்சலி



அமரர்
சி. இராசா
தெல்லிப்பழை
தோற்றம்:14- 04 1923
மறைவு: 17 -06- 1981

எமது அன்புத் தெய்வமே, நீங்கள் எம்மைப் பிரிந்து நான்காண்டு நிறைவெய்துகின்றது. உங்கள் பிரிவால் கண்ணீர்க் கடலில் தத்தளிக்கும் நாங்கள் உங்கள் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

மனைவி, மக்கள், மருமகன், மருமகள், பேரர். 4081

உ
ஸ்ரீ கைலாசபிள்ளையார் துணை

## விவாக சுபமுகூர்த்தப் பத்திரிகை

ஸ்வஸ்தி ஸ்ரீ நிகழும் குரோதன வருஷம் ஆனி மாதம் 20-ம் திகதி (4-7-85) வியாழக்கிழமை கிருஷ்ண துதியையும் உத்தராட நக்ஷத்திரமும் சித்தயோகமும் சூரிய ஓரையும் கூடிய சுபயோக சுபதினத்தில் காலை 7-15 முதல் 9-00 மணிக்குள் வரும் கர்க்கடக லக்ன சுபமுகூர்த்தத்தில்,

| பிரம்மஸ்ரீ குருசாமி ஐயரின் கனிஷ்ட புத்திரனும் பிரம்மஸ்ரீ குமாரசாமிசர்மாவின் சகோதரனுமாகிய சிரஞ்சீவி **கோபாலசர்மாவுக்கு** | ஸ்ரீமான் கி. சுப்பிரமணிய சாஸ்திரிகளின் சிமந்த புத்திரி சௌபாக்கியவதி **லக்ஷ்மிதேவியை** |
|---|---|

பாணிக்கிரகணம் செய்துகொடுப்பதாய் ஸ்ரீ கைலாச பிள்ளையாருடைய கிருபையை முன்னிட்டு, ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ ஜகத்குரு சங்கராச்சார்ய சுவாமிகளின் அநுக்கிரகத்தாலும் பெரியோர்களாலும் நிச்சயிக்கப்பட்டு மேற்படி முகூர்த்தம் 93, கோவில் வீதி, நல்லூர் ஹேரம்பபவனத்தில் நடைபெறுகின்றபடியால் தாங்கள் தங்கள் இஷ்டமித்திர பந்துக்களுடன் வந்திருந்து மேற்படி சுபமுகூர்த்தத்தை நடாத்தி வைத்து தம்பதிகளை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் கேட்டுக்கொள்ளுகின்றோம்.


சுபம்.
இங்ஙனம்
தங்கள் நல்வரவை விரும்பும்
திருமதி குமாரசாமிசர்மா குடும்பத்தினரும்
கு. மணிக்குருக்களும்.

4-7-85 மாலை 5 மணிக்கு 343, நாவலர் வீதி, கைலாசபிள்ளையார் கோவிலடியில் இருக்கும் மணமகன் இல்லத்தில் சமாவர்த்தனமும் மாலை 3 மணிக்கு வரவேற்பு உபசாரமும் நடைபெறும்.

3965

## ஓராண்டு நினைவஞ்சலி

அமரர் மௌனசாமி இராமலிங்கம்
(REGISTERED MEDICAL PRACTITIONER)



தோற்றம்:
14–2–1919

மறைவு:
12–7–1984

திதி: 2–7–1985

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.
மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர்.
பலாலி வீதி, திருநெல்வேலி வடக்கு, யாழ்ப்பாணம். (4148)

## 31-ம் நினைவு நாள்

விஜயேந்திரன்
மயூரமணியன்
மலர்வு:
19-11-81
உதிர்வு:
2-6-85



மணிமொழி பேசும் மாணிக்கக் கொழுந்தே உன் கனிமொழியைக் கேட்டவர்கள் கண் கலங்குகின்றார்கள். ஈராண்டுகளில் உன் அன்னையை மறக்கச் செய்தாய். மணியே உன்னை என்றென்றும் மறவோம்.

உன் தந்தை,
உற்றார், உறவினர்
உன் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.
குமரகோட்டம்,
கோண்டாவில்.
(4110)

விடுதலையான அமெரிக்க 'ரி டபிள்யு ஏ'

# பயணிகள் பிராங்பேர்ட் வந்தனர்

# உபஜனதிபதி ஜோர்ஜ்புஸ் வரவேற்பு

லண்டன், ஜுலை 1

பெய்ரூட்டில் விடுதலைசெய்யப்பட்ட 39 அமெரிக்க விமானப்பணயக் கைதிகள், நேற்று விசேட அமெரிக்க விமானப்படை விமானமொன்றில் மேற்கு ஜெர்மனியின் பிராங்பேர்ட் நகர் போய்ச் சேர்ந்தனர். அவர்களை அமெரிக்க உபஜனதிபதி ஜோர்ஜ்புஷ் மகிழ்ச்சி பொங்க ஆரத்தழுவி வரவேற்ருர்.

கிரேக்கத்தில் ஏதென்ஸ் நகரத்திலிருந்து புறப்பட்ட அமெரிக்க 'ரி. டபிள்யு ஏ' விமானத்தில் வைத்துக் கடத்தப்பட்ட இந்த அமெரிக்கர்கள் முதலில் பெய்ரூட்டுக்கும், தொடர்ந்து அல்ஜீயர்சுக்கும், பின்னர் மீண்டும் பெய்ரூட்டுக்கும் கொண்டுவரப்பட்டனர். கடந்த 17 தினங்களாக இந்த விமானக் கடத்தல் நாடகம் இடம்பெற்றது

விமானப் பயணிகளில் பகுதி, பகுதியாக பலர்விடுதலை செய்யப்பட்டனர். ரொபேர்ட் ஸ்டீவென்ஸ் என்ற 23 வயதான அமெரிக்க கடற்படை வீரர் ஒருவர் மட்டுமே கடத்தல்காரர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

இறுதியாக சுமார் 39 பேர் பணயக்கைதிகளாக தொடர்ந்து வைத்திருக்கப்பட்டனர். விமானத்திலேயே இவர்கள் ஆரம்பத்தில் வைக்கப்பட்டிருந்தபோதிலும், இஸ்ரேல் அமெரிக்க இராணுவ மீட்பு நடவடிக்கைகள் எதுவும் இடம்பெறலாமென்ற அச்சத்தினுல் அவர்கள் தரையிறக்கப்பட்டு பெயர் குறிப்பிடப்படாத இடமொன்றில் பணயம் வைக்கப்பட்டனர்,

லெபனுன் நீதியமைச்சரும், விமானக் கடத்தல்காரர்களின் ஷியாட் அமல் இயக்கத் தலைவருமான நபிபெரி பணயக் கைதிகளின் பாதுகாப்புக்குப் பொறுப்பேற்ருர்.

சிரிய ஜனதிபதி அஸாத், அமெரிக்கா இவ் விமானக் கடத்தல் தொடர்பாக லெபனுன் மீது பழிவாங்கும் நடவடிக்கை எதனையும் எடுக்காது என்று உறுதியளித்ததைத் தொடர்ந்தே பணயக் கைதிகள் விடுதலைசெய்யப்பட்டனர் என்று கடத்தல்காரர்கள் தெரிவித்தனர்.

பெய்ரூட்டில் 39 பணயக் கைதிகளும் விடுதலைசெய்யப்பட்டபின்னர் செஞ்சிலுவைச் சங்க வாகனங்களின் சிரியாவின் தலைநகரான டமாஸ்கஸ் கொண்டுசெல்லப்பட்டனர். பின்னர் அங்கிருந்தும் விசேட அமெரிக்க விமானப்படை விமானத்தில் அவர்கள் மேற்கு ஜேர்மனியின் பிராங்பேர்ட் நகர் வந்தடைந்தனர்.

ஐரோப்பிய சுற்றுப்பயணமொன்றை மேற்கொண்டுள்ள அமெரிக்க உபஜனதிபதி ஜோர்ஜ்புஷ் அவர்களை அங்கு வைத்து மகிழ்ச்சிபொங்க வரவேற்ருர்.

பணயக்கைதிகள், தமக்காகப் பரிந்து பேசியவர்கள், தமது விடுதலைக்காகப் பாடுபட்டவர்கள் அனைவருக்கும் நன்றிதெரிவித்தனர்

இதேவேளை சுமார் 7 வேறு அமெரிக்கர்கள் லெபனுனில் தொடர்ந்து பணயக்கைதிகளாக உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (கி)

"உலகசமூகம்———

## பயங்கரவாதத்துக்கு எதிராக ஒன்றுபட வேண்டும்!"

### பயணிகள் விடுதலை குறித்து றீகன்!

வாஷிங்டன், ஜுலை 1

"பயங்கரவாதத்துக்கு எதிராக உலக சமூகம் ஒன்றுபட வேண்டும்" என்று அமெரிக்க அதிபர் ருெனல்ட் றீகன் தெரிவித்தார்.

பெய்ரூட்டில் அமெரிக்க விமானப் பணயக் கைதிகள் விடுதலையானபின்னர் தொலைக்காட்சியில் தோன்றி நாட்டு மக்களுக்கு உரை நிகழ்த்திய போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

திரு. றீகன் தொடர்ந்து பேசியதாவது: "பயங்கரவாதிகள், அவர்களுக்கு துணைநிற்போர். அவர்களை ஆதரிக்கும் நாடுகள் போன்ற அனைத்தையும் நாகரிக உலகம் கண்டிக்க



வேண்டும்.

அமெரிக்கா பயங்கரவாதிகளுடன் எதுவித தொடர்புகளையோ, அல்லது பேச்சுக்களையோ மேற்கொள்ளாது.

அவர்களின் கோழைத்தனமான தாக்குதல்களை முறியடிப்பதற்கு லெபனுனில் மட்டுமல்லாது, உலகின் அனைத்துப் பாகங்களிலும் அமெரிக்கா போராடி வரும்.

பெய்ரூட்டில் பணயம்வைக்கப்பட்டிருந்த 39 அமெரிக்க விமானப் பணயக் கைதிகள் விடுதலைசெய்யப்பட்டுள்ள போதிலும், லெபனுனில் தொடர்ந்து பணயம்வைக்கப்பட்டுள்ள 7 அமெரிக்கர்களும் விடுதலைசெய்யப்படும்வரை அமெரிக்கா திருப்தியடையாது.

அத்துடன் இந்த விமானக் கடத்தல்நாடகத்தில் கடத்தல்காரர்களினுல் சுட்டுக்கொல்லப்பட்ட அமெரிக்க கடற்படை வீரர் குறித்தும் லெபனுன் நீதிவிசாரணை மேற்கொள்ளவேண்டும்" என்ருர். (கி)

★ எம். ஜி. ஆர் வைத்தியச்செலவு

# ரூ 96,90,376-05 சதம் தமிழக அரசிடம் கையளிப்பு!

சென்னை, ஜுலை 1

தமிழக அரசு முதலமைச்சர் எம். ஜி ராமச்சந்திரனின் கடும் சுகயீனத்துக்காகச் செலவிட்ட ரூபா 96 லட்சத்து 90 ஆயிரத்து 376 ரூபா 5 சதம் மீண்டும் தமிழக அரசிடம் முதலமைச்சரால் கையளிக்கப்பட்டது,

மறைந்த தமிழகமுதலமைச்சர் திரு சி அண்ணுதுரையின் பவளவிழா கொண்டாட்டத்தின்போதே நேற்று இத்தொகை வழங்கப்பட்டது. தமிழக நிதியமைச்சர் இரா. நெடுஞ்செழியன் தமிழகஅரசு சார்பில் இத்தொகையைப் பெற்றுக்கொண்டார்.



சென்னை, நியுயோர்க் ஆகிய இடங்களில் முதல்வர் எம். ஜி. ஆருக்கு கடந்த ஆண்டு பிற்பகுதியில் ஏற்பட்ட கடும் சுகயீனத்துக்கு ரூபா 96,90 376-05 சதம் தமிழக அரசினுல் செலவிடப்பட்டது.

பின்வர் இத்தொகைபொது மக்களிடமிருந்து நன்கொடையாக அறவிடப்பட்டு பேரறிஞர் அண்ணு அறக்கட்டளை அகில இந்திய அண்ணுதிராவிடமுன்னேற்றக்கழகம் ஆகியன முதலமைச்சர் எம் ஜி ஆர் ஊடாக தமிழக அரசிடம் வழங்கியது. (கி)

## 61 நமீபிய சுவாப்போ போராளிகள் கொலை!

லண்டன் ஜுலை 1

நமீபிய விடுதலை ஸ்தாபனமான 'சுவாப்போ' வைச் சேர்ந்த 61 பேர் தென்னுபிரிக்கப் படைகளினுல் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

கடந்த இரு நாட்களில் நமீபியாவில் தென்னுபிரிக்கப் படைகள் மேற்கொண்ட ஊடுருவல் ஒன்றின்போதே இவர்கள் சொல்லப்பட்டனர்.

'சுவாப்போ' இயக்கத்தவரைத் துரத்தியடிக்கும் ஒரு நடவடிக்கையே இதுவென்று தென்னுபிரிக்க அரசு தெரிவித்தது.

இந்த இராணுவ ஊடுருவலின்போது 'சுவாப்போ' விடுதலைப் போராளிகளின் ஆயுதக் குதங்கள் பலவும் தென்னுபிரிக்கப் படைகளால் கண்டு பிடிக்கப்பட்டு அந்த ஆயுதங்களில் பல நாசமாக்கப்பட்டனவென்று தெரிவிக்கப்பட்டது. (கி)

## இலட்சார்ச்சனை

(சாவகச்சேரி)

சாவகச்சேரி துர்க்கையம்பாள் இலட்சார்ச்சனை விழா அடுத்த மாதம் 11ம் திகதி வியாழக்கிழமை ஆரம்பித்து 28ம் திகதி ஞாயிற்றுக்கிழமை சங்காபிஷேகத்துடன் நிறைவு பெறும்.

## குடமுழுக்கு கும்பாபிஷேகம்

(மண்டைதீவு)

மண்டைதீவு கண்ணகை அம்மன் கோயில் புதியதூபி அபிஷேகமும், புதிய கண்ணகி அம்மன் விக்கிரக ஸ்தாபனமும் எண்ணைக் காப்புச் சாத்துதலும் கடந்த 24ம் திகதி நடைபெற்றது. 25ம் திகதி குடமுழுக்கு கும்பாபிஷேகம் இடம் பெற்றது.

தனியார் தவறணைகளினுல்

## தெ. ப. பொ. உ. விற்பனவு

### கூட்டுறவு சங்கங்கள் சீர்குலைவு

(வண்ணார்பண்ணை)

"தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கங்களின் கள்ளு விற்பனை நிலையங்களின் செயற்பாடுகளை முறியடிக்கும் வகையில் இந்த நிலையங்களுக்கு மிக அண்மையில் தனியார் தவறணைகள் இயங்கத் தொடங்கியுள்ளதால் இக்கூட்டுறவுச் சங்கங்களின் கட்டுப்பாட்டில் சீர்குலைவுகள் ஏற்படும் நிலை உருவாகி வருவதாக இச்சங்கங்களைச் சேர்ந்த முகாமையாளர்கள் சிலர் கவலை தெரிவித்தனர்.

இச்செயல் சங்கங்களின் வளர்ச்சிக்கும் ஒற்றுமைக்கும் பெரும் குந்தகம் விளைவிப்பதாக அமைந்து வருவதாகவும் அவர்கள் கவலை தெரிவித்தனர்.

இச்செயல் சங்கங்களின் தொழிலாளர், உற்பத்தியாளர் மத்தியில் பலதரப்பட்ட முன்னேற்றங்களுக்குத் தடையாக இருந்து வருவதாகவும் கட்டுப்பாடற்ற மதுபான விற்பனை முறை இதிலிருந்து உருவாக இடமேற்பட்டு விட்டதாகவும் இவர்கள் கவலை தெரிவித்தனர்.

மதுவரி இலாகாவின் நடைமுறைகளில் சோர்வு ஏற்பட்டுள்ளதும் கூட்டுறவு முறையில் இத்தொழில் செய்பவர்களிடத்தில் காணப்படும் ஒற்றுமையில்லாத் தன்மையே இத்தனியார் போட்டித் தவறணைகள் உருவாகக் காரணமாக உள்ளதென இதுதொடர்பான சில அதிகாரிகள் தெரிவித்தனர்.

வறிய நாடுகள்———

## கொள்வனவை விட விற்பனையில் முன்னேற்றம்!

லண்டன் ஜுலை, 1.

கடந்த நான்கு வருடங்களில் சென்ற ஆண்டிலேயே வறிய நாடுகள் தமது கொள்வனவை விட விற்பனையில் முன்னேற்றம் கண்டுள்ளன.

இத்தகவலை சர்வதேச நாணய நிதியம் வெளியிட்டுள்ளது. 1981 ம் ஆண்டுக்குப்பின்னர் கடந்த 84ம் ஆண்டிலேயே இந்த முன்னேற்றம் ஏற்பட்டது.

வறியநாடுகள் சுமார் 52, 100 கோடி அமெரிக்க டாலர்களைத் தமது சர்வதேச விற்பனை மூலம் சம்பாதித்தன. ஆனுல் அவை 51 ஆயிரம் கோடி டாலர்களையே கொள்வனவுக்காகச் செலவிட்டன என்று சர்வதேச நாணய நிதியம் அறிவித்தது.

இந்த முன்னேற்றம் வறிய நாடுகளின் பொருளாதார வளர்ச்சியில் ஒரு சமநிலையை ஏற்படுத்துவதாக இருப்பதாகவும் இந்நிதியம் குறிப்பிட்டது.

## நெல் உற்பத்தியில் வீழ்ச்சி

(கொழும்பு)

இவ்வருட நெல்உற்பத்தி கடந்த ஆண்டினை விட 1 கோடியே 50 லட்சம் புசல்களினுல் குறையலாம் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இந்த உற்பத்தி பாதிப்புக்கு வறட்சி, வெள்ளம், தீவிர வாதம் ஆகிய சம்பவங்கள் காரணமென்றும் தெரிவிக்கப்பட்டது. (ரா)

## அலங்கார உற்சவம்

(யாழ்ப்பாணம்)

சரவணை கொட்டாங்காடு ஞானவைரவர் அலங்கார உற்சவம் எதிர்வரும் 5ம் திகதி வெள்ளிக்கிழமை ஆரம்பமாகும். தொடர்ந்து 10 நாட்கள் நடைபெறும் உற்சவம் இறுதி நாளன்று பொங்கல் பூசையுடன் முடிவடையும்.

### மணிவாக்கு

சலத்தால் பொருள் செய்து ஏமார்த்தல் பசுமண்
கலத்துள் நீர் பெய்து இரீஇ யற்று.

—குறள்

## நமதுநோக்கு

# வர்த்தக போர் நிறுத்தம்

ஹிரோஷிமா விலும் நாகசாக்கியென்ற இரு இடங்களிலும் போட்ட அணுகுண்டுகளே இரண்டாவது உலக மகா யுத்தத்தை உடனடிமுடிவுக்குக் கொண்டுவந்தது.

ஐரோப்பாவில் வெற்றி வாகைசூடிய நேசபடைகள், ஆசியாவில் தொடரும் போரை முடிவுகட்டுவதற்கு ஜப்பானின் துடுக்கைஅடக்க வேண்டியிருந்தது.

அதன் விளைவே உலகம் கண்ட அணுகுண்டு அழிவு. இதன் கண்டுபிடிப்புக்கு மூலகாரணமாகவிருந்த விஞ்ஞானமேதை ஐன்ஸ்டீன் இச்சம்பவத்தைக் கேட்டு கண்ணீர்விட்டது உண்மைக் கதை அந்தப் பரமஞானியின் ஆணைப்படி இவ்வுலகில் ஒரு போதும் அணு ஆயுதப் போர் நடைபெருதிருக்கவேண்டுமென்று உலகின் நல்வாழ்வு விரும்பும் ஒவ்வொருவரும் பிரார்த்திக்கவேண்டும்.

அது அங்ஙனமாக, ஜப்பான் ஒரு ஆசிய நாடு. ஐரோப்பிய நாடுகளின் தொழில்வளர்ச்சிக்கு சவாலாயிருந்த ஒரே ஒரு ஆசிய நாடு, ராணுவ பலமும் அதிகரித்திருந்தது. ஹிட்லர் முசோலினி பக்கம் திடீரெனப் போரில் குதித்தது. எடுத்த எடுப்பில் அமெரிக்க போர்க்கப்பல்கள் இரண்டை மூழ்கடித்தது. இந்த ஆசிய நாட்டுக்கெதிராக அணுகுண்டு பிரயோகிப்பதில் அமெரிக்கா தயங்கவில்லை யென்ற கருத்து அக்காலத்தில் பேசப்பட்டது.

இன்று அமெரிக்க, ஜப்பானிய உறவில் கடந்த உலக யுத்தத்தின் பகைமை எவ்வகையிலும் கலந்திருப்பதாகத் தெரியவில்லை.

உலகில் வர்த்தகத்துறையில் என்றும் முன்னிற்கும் ஜப்பான்- உதய சூரியனின் ஆசிபெற்ற ஜப்பானிய மக்கள், சமாதானத்தை விரும்பும் நாடும் மக்களுமென்பது உண்மை.

செல்வத்தால் உண்டாகும் அதிகாரவெறி செல்வந்தநாடுகளை பிடிப்பது கண்கூடு. இதுவே ஜப்பானின் போர்(பேய்)க் கூத்துக்குக்காரணமாயிருந்தது.

யுத்தம் முடிவடைந்த காலை அமெரிக்க ஜெனரல் மக்காதரின் மேற்பார்வையில் சிலகாலம் தன்னைப் புனரமைத்த ஜப்பான் இன்று உலகின் வர்த்தகத் துறையில் எட்டிப்பிடிக்க முடியாத முதலிடம் பிடித்திருக்கிறது

இந்த அபூர்வ வளர்ச்சி உண்மையில் ஐரோப்பிய அமெரிக்க நாடுகளுக்கு அச்சுறுத்தலாக அமைந்திருக்கிறது.

தரமான மோட்டார்கார் தயாரிக்கும் ஜெர்மனி [மேற்கு] தனது உற்பத்தியை உள்ளூரிலேயே விற்பனை செய்யமுடியாத நிலை உருவாகிறது. அதே தரமான, இன்னும் திறமான காரைக் குறைந்த விலைக்கு ஜப்பானிலிருந்து இறக்குமதி செய்யமுடியுமென்ருல் நிலைமை புரிகிறது.

உலகின் குபேர நடாகிய அமெரிக்கா தனது உற்பத்தியை ஜப்பானுக்கு ஏற்றுமதி செய்ய முடியாத நிலையில் ஜப்பானிய இறக்குதிக்குக் கட்டுப்பாடு தீவிரப்படுத்த வேண்டுமென்று நினைக்கிறது.

ஐரோப்பிய பொதுச் சந்தையிலும் இந்த மனப்போக்கு தோற்றியிருக்கிறது. இரு இடங்களிலும் இறக்குமதிக் கட்டுப்பாடு இறுக வேண்டுமென்ற கொள்கை உருவாகின்றது.

ஜப்பான் தனது இறக்குமதியை அதிகரிக்காவிட்டால், தெளிவாக அக்கொள்கையை விளக்கி செயற்படுத்தாவிட்டால், அமெரிக்க,ஐரோப்பிய நாடுகள் ஜப்பானின் வர்த்தகத்தைப் பகிஷ்கரிக்க வேண்டுமென்ற ஆவேசம் எழுகின்றது.

அமெரிக்க ஜனாதிபதி றீகனின் எதிர்ப்புக்குரல் இந்த நடவடிக்கையில் தீவிரமாக எழுகின்றது.

சர்வதேச வர்த்தகத்தில், போர்க்கோலம் தீவிரமடைகின்றது. உலகனைத்தும் ஒன்றுபட்டு நின்ருலும், ஜப்பானுக்கென்றே எழுதப்பட்ட இத்துறை அந்த நாட்டை இலகுவில் அசைக்காதென்ற அபிப்பிராயம் நடுநிலைமையுடைய நாடுகள் கொண்டிருக்கின்றன.

எந்தப் போரிலும் போட்டியிலும் சமத்துவ புத்தி பேணும் பிரிட்டிஷார், ஐரோப்பிய பொதுச்சந்தையின் பம்பரத்துக்கு ஆடுபவர்கள் அல்ல. ஐரோப்பிய பொதுச்சந்தை அமெரிக்காவின் பொம்மையாகவிருப்பதை அவர்கள் அறிய வல்லவர்.

அடுத்த மாதம் ஐரோப்பாவுக்கு விஜயம் செய்யும் ஜப்பானிய பிரதமர் நாகசோனி இன்று நிலவும் நெருக்கடிக்கு நல்ல ஆலோசனை கொண்டுவரக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

உலக வர்த்தகம் உலர்ந்து போவதால் ஜப்பான் செழிக்க முடியாதென்பதை அந்த நாட்டு வர்த்தக மன்னர்கள் அறிவார்கள். எனவே ஜப்பானை எதிர்த்துப் போராடுவது உலக வர்த்தகத்துக்கு வீழ்ச்சியாக முடியுமென்ற அச்சம், வர்த்தகப் போர் நிறுத்தத்தைத் தூண்டியிருக்கிறது.

---

### கிலி நீங்கி அமைதியேற்பட

# பூட்டான் மகாநாட்டில் வழி பிறக்குமா?

பயங்கரவாதத்தைக் கைவிட வேண்டும். ஆயுதங்களைக் கீழே போட வேண்டும், பிரிவினைக் கோரிக்கையைக் கைவிட வேண்டும், இதன்பின்னரே பேச்சுவார்த்தை என்ற நிபந்தனைகளும், பிடிவாதமும் கைவிடப்பட்டு இனப்பிரச்னைக்கு ஒரு தீர்வு காண்பதற்கு கூட்டணியினரையும் தீவிரவாதிகளையும் சந்தித்துப் பேசுவதற்கு அரசு முன்வந்திருப்பது நல்லதோர் அறிகுறி.

இந்தியாவின் மேற்கு எல்லையில் சிக்கிம் மாநிலத்தை அடுத்துள்ள பூட்டான் மிக உயர்ந்த மலைகளையும் நதிகளையும் அடர்ந்த காடுகளையும் கொண்ட வளமான பூமி. இந்தியாவின் உதவியுடனும் ஆதரவுடனும் அமைதியாக பூட்டானை ஆட்சிசெய்துவரும் மன்னர் ஜிக்மிசிங்கேவாங்சுக் 1955ம் ஆண்டு நவம்பர்மாதம் பதினொராம் தேதி பிறந்தவர் 1972ம் ஆண்டு ஜூலை 21ம் தேதி பட்டத்துக்கு வந்தவர்.

அழகும் அமைதியும் நிறைந்த பூட்டான் தலைநகரில் இலங்கையின் இனப்பிரச்னைக்கு அரசியல்தீர்வு காண்பதற்கான பேச்சுவார்த்தைகள் நடைபெறவிருக்கிறது.

### எஸ். எம். ஜி.

இந்தியாவின் முயற்சியினுல்தான் இப்பேச்சுவார்த்தைகள் நடைபெறவிருக்கிறதென்பதும் தமிழர் விடுதலைக் கூட்டணியையும் தமிழ்த்தீவிரவாதிகளையும் இலங்கை அரசு சந்திக்க முன்வந்துள்ளதென்பதும் தெளிவு. கொழும்பில் ஆரவாரத்துடன் இலங்கை ஜனாதிபதி கூட்டிய சர்வகட்சி மாநாடு வட்டமேசை மாநாடாகி ஒரு வருடம்வரை இழுத்தடித்து ஒன்றுமில்லாமல் முடிந்தது போலல்லாமல் பூட்டான் மாநாட்டில் ஆக்கபூர்வமான திட்டம் சமர்ப்பிக்கப்பட்டு ஆலோசிக்கப்படுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. பௌத்தர்கள் பெரும்பான்மையாகவும் இந்துக்கள் சிறுபான்மையாகவும் அமைதியுடன் வாழும் பூட்டானில் இலங்கையின் இனப்பிரச்னை சம்பந்தமாகப் பேச்சுவார்த்தை நடைபெறுவது மிகப் பொருத்தமானதே!

### தமிழர் தரப்பில் ஒரே அமைப்பு

இந்தியாவின் விடுதலை ஒன்றையே நோக்கமாகக்கொண்டு காந்தி மகாத்மா அகிம்சை வழியில் போராடினுர்; இதே விடுதலைக்காக சுபாஸ்சந்திர போஸ் ஆயுதம் ஏந்திப் போராடினுர். இருதரப்பினரும் ஒருவரோடொருவர் மோதிக் கொண்டதில்லை. இந்தியா விடுதலை பெற்றது சுதந்திரப் பேச்சுவார்த்தைகளில் காந்திமகாத்மாவும் தேசிய காங்கிரசின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

இன்றுள்ள நிலையில் கூட்டணியும் இளைஞர் குழுக்களும் பல்வேறு பிரிவுகளாகப் பேச்சுவார்த்தைகளில் கலந்துகொள்ளாமல் ஒரு பொதுத்திட்டத்தை வகுத்து ஒரே அமைப்பாகப் பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்வதுதான் தமிழ் பேசும் மக்களின் நிலையை வலுப்படுத்த உதவும். கிழக்கு வங்கத்தில் முஜிபுர் ரஹ்மான் தலைமையைப் போன்று இலங்கையிலும் தமிழருக்கு வலுவான தலைமை இருந்திருந்தால் தமிழ்ஈழம் எப்போதே உருவாகியிருக்கும் என்று திரு. சரத்முத்தெட்டுவேகம ஒருசமயம் சுட்டிக்காட்டியதை இப்பொழுது நினைவில் கொள்வது நல்லது!

### ஜனாதிபதி அளித்த பேட்டி

"பார் ஈஸ்டர்ன் எக்கனிமிக் றிவியூ" என்ற பத்திரிகைக்கு ஜனாதிபதி ஜே ஆர். ஜயவர்த்தன சமீபத்தில் அளித்த பேட்டி வெளிவந்திருக்கிறது

"இலங்கையின் இனப்பிரச்னையை இவ்வருட இறுதிக்குள் தீர்த்துவைக்க முடியும் என்று நம்புகிறேன். பிரச்னைக்கான தீர்வுகள் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படும் இத்தீர்மானத்தை அமைச்சர்கள் யாராவது எதிர்த்தால் அவர்கள் பதவியிலிருந்து நீக்கப்படுவார்கள். எவ்வித எதிர்ப்பு வந்தாலும் எனக்குச் சரியென்று படுவதனை நான் செய்தே தீருவேன்" என்று இப்பேட்டியில் ஜனாதிபதி ஜே. ஆர், தெரிவித்திருக்கிறார்.

அமைச்சர்களுக்கும் ஆளும் கட்சியினருக்கும் எச்சரிக்கை விடுவதாக ஜனாதிபதியின் பேட்டி தொனிக்கிறது.

எப்படியிருந்தாலும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி தமக்கு சகல அதிகாரங்களும் இருக்கின்றன வென்பதையும் தாம் நினைத்தால் பிரச்னையைத் தீர்த்து வைக்க முடியுமென்பதையும் இந்தப் பேட்டியில் எடுத்துக் காட்டியிருக்கிறார். இன்று ஏற்பட்டிருக்கும் தடைகளையும் தாண்ட அந்த அதிகாரத்தை உபயோகித்துத் தமிழர் பிரதிநிதித்துவத்துக்கு ஆவனசெய்ய வேண்டும்.

அமைச்சர் தொண்டமானும் முன்னாள் கல்வி அமைச்சர் அல்ஹாஜ் பதியுதீன் மாமூத்தும் "இன்றைய ஜனாதிபதியால்தான் இனப்பிரச்னையைத் தீர்த்து வைக்க முடியும்" என்று முன்னர் ஒருதடவை கூறியிருந்தனர்.

ஜனாதிபதி ஜே. ஆர். நினைத்திருந்தால் எப்பொழுதோ இப்பிரச்னைக்குத் தீர்வு கண்டிருக்க முடியும். இவரை எதிர்த்து எவரும் எதுவும் செய்துவிட முடியாது என்பது கடந்தகால அரசியல் தரும் பாடம். ஆனால் பிரச்னைக்குத் தீர்வு காண வேண்டும் என்று ஜனாதிபதி ஜே ஆர். மனப்பூர்வமாக நினைக்க வேண்டுமே! தமிழ்த் தலைவர்களும் தமிழ்த் தீவிரவாத இயக்கங்களின் தலைவர்களும் இந்த மனமாற்றத்தை உணர அதற்கேற்றவாறு ஜனாதிபதி நடந்துகொள்வது அவசியம்.

(7-ம் பக்கம் பார்க்க)

---

## அருள்புரியும் அழகன்

ஆடும் பரிவேலொடு ஆறுமுகம் ஆனவன்
அம்மையார் அருகமைய அனகன் ஆனவன்
அட்டகிரிப் பதிவாழும் அழகன் ஆனவன்
அடியார்க்கு அருளவெண்ணி ஆடுகிறான்
தீர்த்தம் இன்று

நவாலியூர் ஏ. எஸ். ஜி.

✶ நவாலி அருள்மிகு அட்டகிரி கந்தசாமி கோவில் தீர்த்தோற்சவம் இன்று.

---

### பொலிகண்டிக் கந்தன்

## தீர்த்தமாட இன்று பவனி வருகிறான்

இராகம்; மாலை மருதம் தாளம்: ஆதி

பல்லவி

குன்றினில் இருப்பவன் குமரனவன்- என்னைக்
குவிந்திருக்கும் வினையை அறுப்பவனு மவனே:

அனுபல்லவி

அன்புருகு மடியார்கள் ஆதரிக்கும் பொலிகையிலே
தென்புதரு தெய்வமணி எழுந்தருளி வருகின்றான்
(குன்றி)

சரணம்

இளமைதரு செந்தமிழ்க் கேற்றபெரு தலைவன்
இடும்பை தருமரக்கற் கேற்றபெரு காலன்
முதுமையிலா வாழ்வுக் கிலக்கணமே முருகன்
முக்காலமும் தமிழர்க் கேற்ற பெருதலைவன்
(குன்றி)

மாமதுர பொலிகை மாகந்தவனக் கடவை
மாகந்தா! சுகந்தா வென்றேற்று கின்றோமுன்னை
ஆதாரம் பெருகவுனை அடியவர்க் கருள்சொரிந்து
ஆறுதலையுடனே ஆறுதல் தந்திடய்யா
(குன்றி)

மு. மருதபிரான்.

---

✶ இன்று மாவை முருகன் மஞ்சம்

## அன்பர் மனத்துறையும் திருமுருகன்

வஞ்சனைகள் நாடாமல் வாய்மையதே நாடிடுவோர்
நெஞ்சமதை நாடும் திருக்குமரன் — மஞ்சமதில்
வீதிவரும் காட்சிநலன் காண விழைவோர்க்கும்
மேதினியில் உண்டோ குறை.

அன்புடையோர் தம்மகத்தும் ஆர்க்கும்
இரங்குகின்ற
பண்புடையோர் தம்மகத்தும் வாழ்ந்திடுவான்
— நம்மை
வழங்கும் திருவடியான் மாவையூர்க் கந்தன்
உளங்கொள் வோர்க் குண்டோ குறை.

— ம. பார்வதிநாதசிவம்

# "அமரர் ஆனந்தராஜன் மாணவ சமுதாய உரிமைக்காக பலத்துடன் போராடி வந்தார்"

## அஞ்சலிக் கூட்டத்தில் இறுதி உரைகள்

[யாழ்ப்பாணம்]

"அமரர் ஆனந்தராஜன் மாணவர் சமுதாயத்தின் உரிமைகளுக்காக துணிவுடனும் தைரியத்துடனும் போராடி வந்தார். பல வேறுமட்டங்களில் வெவ்வேறான சமயங்களில் அதிபர்கள் தூதுக்குழுவின் பேச்சாளர் என்றவகையில், இளைஞர்களின் நலனுக்காக வாதாடினார். குறிப்பாக அவர்களின் அடிப்படை உரிகளும், கோரிக்கைகளும் அவர்களுக்கு மறுக்கப்பட்டபோது அவர் வாதாடினார்."

யாழ் சென் ஜோன்ஸ் கல்லூரி ஜூபிலி மண்டபத்தில் அமரர் ஆனந்தராஜனின் இறுதி அஞ்சலியில் உரை ஆற்றிய யாழ். சென் பற்றிக்ஸ் கல்லூரி அதிபர் வண. பிதா பிரான்சிஸ் ஜோசப் மேற்கண்டவாறு கூறினார்.

வண. பிதா சர்வானந்தா தலைமையில் நடந்த இந்த அஞ்சலிக் கூட்டத்தில் அவர் மேலும் கூறியதாவது:-

'இன அமைதியின்மை காரணமாக ஏற்பட்ட பிரச்னைக்கு தீர்வு காணும்வகையில் பேராதனை பல்கலைக்கழகத்திற்கு, அவர்களுடன் சென்றவர்களில் ஒருவனாக இருந்ததினால், இதனால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சார்பாக ஒரு தீவைக் காண்பதில் அவர் துணிவுடன் நின்று செயலாற்றியதைக் காணக்கூடியதாயிருந்தது. பல்வேறு கூட்டங்களிலும் அவர், மாணவர் முன்னேற்றத்திற்காக என்றும் எவ்வித பயமுமின்றி துணிச்சலுடன் வாதாடி வந்திருக்கிறார் என்பதை அறிந்திருக்கிறேன்

அவர் என்றும் அடிப்படை உரிமைகளைப் பயமின்றி பாதுகாக்கும் பாதுகாவலராகவும், எந்த இடத்திலும் அவர் எப்பொழுதும் சக்தியற்வர்களுக்கு உதவுபவராக விளங்கிவந்தார்" என்றார்

கல்லூரி நலன்புரி சங்கத்தின் சார்பில் பேசிய வ. பே. ச. தலைவர் திரு. எஸ் கனகரத்தினம் கூறியதாவது:"அமரர் ஆனந்தராஜன் மறைவினால் கல்வித்துறை ஓர் நேர்மையான கல்விமானை இழந்துவிட்டது. பல்வேறு சமூகப் பணியில் சுடர்விட்டுப் பிரகாசித்த சந்திரன் மறைந்துவிட்டது. பலருக்கு பல துறைகளில் வழிகாட்டிய சலங்கரை விளக்கு அணைந்துவிட்டது அறிவு நிரம்பிய ஆலயம் கதவுகளை மூடிக்கொண்டது.

அமரர் ஆனந்தராஜன் கல்வித்துறையில் ஒப்பாருமிக்காருமின்றி திகழ்ந்தார்

மருத்துவதுறையில் ஈடுபட வாய்ப்பிருந்தும் ஏனோ அவர் விஞ்ஞானத்துறையில் நாட்டம் கொண்டு பட்டம் பெற்றார். மருத்துவதுறை இழப்பு கல்வித்துறை வளர்ச்சிக்கு குறிப்பாக யாழ் சென் ஜோன்ஸ் கல்லூரியின் வளர்ச்சிக்கு துணைபுரிந்தது கல்லூரியை விட்டு பட்டப் படிப்பை முடித்துக் கொண்டு அமரர் தான் பெற்ற கல்லூரிக்கு சேவை செய்வதற்காகவே அக்கல்லூரியின் ஆசிரியர்பதவியில் அமர்ந்தார். அவரின் திறமையும் பொறுப்புணர்ச்சியும் நன்கு மதிக்கப்பட்டதன் காரணமாக வெகுவிரைவில் கூட்டு அதிபராகவும் துணை அதிபராகவும் பதவி ஏற்றார்

பரியோவான் கல்லூரி அதிபர் என்ற ரீதியில் அமரர் ஆனந்தராஜன் ஆற்றிய சேவைகளை வர்ணிக்க வார்த்தைகளே கிடையாது அவரை அறியும் பேறு பெற்ற எம் எல்லோர்க்கும் மாணவ சமுதாயத்திற்கும், பெற்றோர்க்கும் இங்கு குழுமியிருக்கும் பெருந்திரளான மக்களுக்கும் அன்னாரின் இழப்பு ஈடு செய்ய முடியாத ஒன்று கும்



ஆனந்தராஜனின் மறைவினால் ஏற்பட்ட இடைவெளியை நிரப்புவது கடினம் அன்னாருக்கு நாம் செலுத்தும் அஞ்சலி யாதெனில் அவரின் கொள்கைகளைக் கடைப் பிடித்து வாழ்வதேயாகும் என்றார்.

உதவி அதிபர் ரி. குணசீலன் கூறுயதாவது: அமரர் ஆனந்தராஜன் 25 வருடங்களுக்கு மேலாக இக்கல்லூரியின் வளர்ச்சிக்காக இரவு பகலாக பாடுபட்டு உழைத்தார். கடந்த 10 வருடகாலம் அதிபராக இருந்து கல்லூரியின் முன்னேற்றத்திற்காகப் பாடுபட்டார். மாணவர்களின் முன்னேற்றம் மாணவ சமுதாய வளர்ச்சிக்காக இடைவிடாது பணிபுரிந்தார்.

83, கலவரத்தின்பின் தென் பகுதியிலிருந்து பாதிக்கப்பட்டு அகதிகளாக இங்குவந்த ஆயிரக்கணக்கான தமிழ் மாணவர்கள் கல்லூரிகளின் இடம்தேடி அலைந்தபோது அவர் தனது கல்லூரியில் பலவசதியீனங்களுக்கு மத்தியில் சுமார் 300 மாணவர்களுக்கு அனுமதி கொடுத்தார்.

அவர் ஒவ்வொரு மாணவனையும் தனித்தனியாக பெயர் மூலமும் கல்வி, விளையாட்டுகளில் அம்மாணவன் பெற்ற பெறுபேறுகளின் மூலமும் அறிந்திருந்தார்.

அவரின் பெறுமதிமிக்க ஆலோசனைகளை மாணவர்களுக்கு வழங்கி, அவர்களை கலவியிலும் விளையாட்டிலும் சிறந்து விளங்க செய்தார். பழைய மாணவர் திரு எஸ் எம்.வி. திஸநாயகம் பேசுகையில் கூறியதாவது அதிபர் ஆனந்தராஜனை 35 வருடங்களுக்கு முன் அறிந்திருந்தேன் அவர் பயிலும் காலத்தில் கல்வியிலும், விளையாட்டிலும் சிறந்து விளங்கி நற்பண்புகளடங்கியவராக திகழ்ந்தார். வெளிநாட்டில் படித்துப் பட்டம் பெற்றபின்னர் இங்குவந்து தான் பயின்ற கல்லூரியிலேயே ஆசிரியராகக் கடமை ஏற்றார். இக்கல்லூரியின் வளர்ச்சிக்காக பல விதத்திலும் பாடுபட்டு உழைத்தார். அவர் இங்கு பல கட்டடங்களை எழுப்பினார். (க)

# அடியார்க்கு அருள் பாலிக்கும் புற்றளை சித்தி விநாயகர்

**-ஏ. என். எஸ். திருச்செல்வம்-**

தென் புலோலியிலே வயலும் வயல்சார்ந்த இடத்தின் மத்தியிலே மகிழமரச் சோலையிலே கோயில் கொண்டெழுந்தருளியிருந்து தன்னைச் சரணடையும் பக்த அடியார்களுக்கு வினையறுத்து அருள் பாலித்துக்கொண்டிருக்கும் புதுமைமிக்க புற்றளைச் சித்தி விநாயகர் பெருமான் நேற்று தேரேறி வீதிவலம் வந்து பக்த அடியார்களுக்கு அருள்பாலித்தார்.

மகிழமரச் சோலையிலே வீற்றிருக்கின்ற விநாயகப்பெருமானின் கோவில் அமைந்திருக்கும் இடம் 1720ம் ஆண்டளவில் பள்ளமான வயல் நிலமாக இருந்தது. அங்கே ஒரு மாமரமும் அம் மாமரத்தைச் சுற்றிவரப் புற்றும் அப் புற்றை மூடி நொச்சிப் பற்றைகளும் காணப்பட்டன. அவ் வயலின் சொந்தக்காரரான தெய்வ பக்தர் சிதம்பரவிநாசியார் அவ் வயலை உழுவதற்காக நொச்சிப் பற்றையை அகற்றி புற்றை வெட்டியபோது கல்லாலான அழகிய எம்பெருமான் விநாயகரின் திருவுருவமொன்று வெளித்தோன்றியது. சிதம்பரவிநாசியாரும் மற்றும் ஊரவர்களும் ஒன்று சேர்ந்து குடிசையொன்று அமைத்து அதில் விநாயகப் பெருமானை எழுந்தருளச் செய்து வழிபாடு இயற்றி வந்தனர்.

நாளடைவில் எம் பெருமான் எழுந்தருளியிருக்கும் ஆலயம் புதுப்பொலிவுபெறத் தொடங்கியது. திருப்பணி வேலைகளும் நடைபெற்றன.

இவ் ஆலயத்தின் திருப்பணி வேலைகள் பூரணமாகி கும்பாபிஷேகம் பல வருடங்களுக்கு முன் நடைபெற்றது. பின்னர் இரண்டாவது முறையாக 1971ம் ஆண்டு வைகாசி மாதம் எம் பெருமானுக்கு சம்புரோஷண மகாகும்பாபிஷேகம் நடைபெற்றது.

இவ்வாலயம் கர்ப்பக்கிரகம், அர்த்தமண்டபம், மகாமண்டபம், தரிசன மண்டபம், ஸ்தம்ப மண்டபம், வசந்த மண்டபம், கோபுரவாசல் மண்டபம் ஆகியவற்றைக் கொண்டதாகத் திகழ்கின்றது. ஆலயத்தின் மூலமூர்த்தியாக விநாயகர் விளங்க தெற்கு வாசல் மூர்த்தியாக வள்ளி, தெய்வானை சமேத சுப்பிரமணியர் எழுந்தருளியிருக்கிறார். இவற்றோடு வைரவ சண்டேசுர மூர்த்திகளுமுண்டு. எம்பெருமான் தீர்த்தமாடச் சிறந்த தீர்த்தக்கேணியும் உண்டு கடந்த 1980ம் வருடம் வரை எம்பெருமான் வீதி வலம் வந்த தேர் இங்கு எழுந்தருளியிருக்கும் சேவற்கொடியோனாகிய முருகனுக்குக் கொடுக்கப்பட்டு விநாயகருக்குப் புதிய சித்திரத்தேர் உருவாக்கப்பட்டு 1980ம் ஆண்டு சித்திரத்தேர் வெள்ளோட்டம் நடைபெற்றது

இன்று விநாயகப் பெருமான் தீர்த்த உற்சவம் இடம்பெறுகிறது.

# 58 பெரு வெள்ளத்தில் [redacted] வவனியாவுக்கு உதவிக்கரம் நீட்டிய காப்டன் எச். எஸ். நரேந்திரா!

கடந்த 23ம் திகதி இந்திய போயிங் விமானம் 'கனிஷ்கா' அந்திலாந்திக்கில் மூழ்கி விபத்துக்குள்ளானது உலகம் முழுவதையும் கவலையில் ஆழ்த்திய ஒரு சம்பவமாகும்.

காப்டன் எச். எஸ். நரேந்திரா [வயது-56] என்பவரே இந்த விமானத்தின் பிரதம விமான ஓட்டி!

இலங்கையின் வடபகுதி, குறிப்பாக வவனியா மக்களைப் பொறுத்தவரை இந்த இந்திய விமான ஓட்டி நினைவுகூரப்பட வேண்டிய ஒருவராகின்றார்

1958ம் ஆண்டு இலங்கையில் பெரும் வெள்ளம் ஏற்பட்டிருந்தது வவனியா மாவட்டமும் பாதிக்கப்பட்ட பகுதிகளில் ஒன்றாகும் ஏனைய இடங்களுடன் ரயில், சாலைவசதிகள் துண்டிக்கப்பட்ட நிலையில் இம்மாவட்டம் அத்தியாவசிய பண்டங்களைப் பெறமுடியாது பெரும்கஷ்டங்களை எதிர்நோக்கியது

ரெயினிரைட் என்பவரே அப்போதைய வவனியா அரசாங்க அதிபர் உதவிப் பண்டங்களை விரைந்து அனுப்பும்படி கொழும்புடன் தொடர்பு கொண்டார்.

அப்போது 'இலங்கை விமானப்படை'க்கு சிறகு முளைக்காதகாலம்! அன்று அப்படையிலிருந்தவர்களில் பலருக்கு வடபகுதி வரை நீண்ட விமான பயணம் கிடைத்திருக்குமோவென்பது சந்தேகமே

இந்நிலையில் இந்திய விமான படை உதவிக்கு விரைந்து வந்தது. அப்படையில் அங்கம் பெற்று இலங்கை வந்தவர்களில் ஒருவரே காப்டன் எச். எஸ் நரேந்திரா!

இவர் அப்போது 27 வயதான ஒருஇளம் விமானஓட்டி, ஒரு 'டக்கோட்டா' [Dakota] விமானமொன்றில் வவனியாவுக்கு உதவிப் பண்டங்களைக் கொண்டுவரும் பணியை இவர் பொறுப்பேற்றார்

இரத்மலானையிலிருந்துவிமானப் புறப்பட்டது வவனியாவை சரிவரக் கண்டுபிடித்து அங்குள்ள இரண்டாம் யுத்த விமானத்தளத்தில் விமானத்தை இறக்கவேண்டியது. நரேந்திராவின் பொறுப்பு.

இலகுவாக வவனியா செல்ல இவர் ஒரு யுக்தியைக் கையாண்டார் மருதானை ரயில் நிலையம்வரை தாழ்வாகப் பறந்துவந்து பின்னர் அங்கிருந்தும் வடபகுதிக்குச் செல்லும் ரயில் பாதையைத் தொடர்ந்து வந்து அவர் வவனியா வந்தடைந்தார்

வவனியா விமானத்தளத்தில் அப்போது சீரற்ற நிலை வெள்ளநீரினால ஓடுபாதை மூடப்பட்டிருந்தது. கூடவே கட்டாக்காலி கால்நடைகளும் அங்கே மேய்ந்தவண்ணமிருந்தன

இத்தனைக்கும் மத்தியில் அவர் மிக லாவகமாக அந்த டக்கோட்டா விமானத்தைத் தரையிறக்கினார் அத்துடன் உதவிப்பண்டங்களையும் வவனியா அரச அதிபரிடம் கையளித்த பின்னர் ஒருமணி நேரத்தில் மீண்டும் வந்தவழியாகவே இரத்மலானை நோக்கி விமானத்தைக் கிளப்பினார்

"இலங்கையின் விமானத்தளங்கள் மேலும் சீர்செய்யப்பட வேண்டுமென அப்போது அவர் தம்மோடு விமானத்தில வவனியாவுக்கு வந்திருந்த பத்திரிகையாளர் ஒருவரிடம் தெரிவித்தார்.

அன்று அந்த விமானத்தில் அப்பத்திரிகையாளரும் காப்டன் நரேந்திராவும் மட்டுமே வந்திருந்தனர்.

பிற்காலத்தில் அனுபவம் மிக்க விமானியாகப் பல்லாயிரக்கணக்கான அடிகள் உயரத்தில் தமது வாழ்வின்பெரும் பகுதி காலத்தைப் பறந்து திரிந்து கழித்தவர் காப்டன் நரேந்திரா! இறுதியாக தமது வாழ்வையும் பல ஆயிரம் அடிகள் ஆழத்தில் நீரில்மூழ்கி வாழ்வை முடித்துக் கொண்டார் அந்த திறம்மிகுந்த விமானி.

நரேந்திராவுடன் அன்று வவனியாவரை விமானத்தில் வந்த பத்திரிகையாளர் வேறெவருமில்லை. அவரே கடந்த சில தினங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் வைத்துக் கடத்தப்பட்ட சிசில் விக்கிரமநாயக்கா என்பது குறிப்பிடத்தக்கது.

– அனந்த்

## வருடாந்த பொதுக்கூட்டம்

[புலோலி]

யாழ் மாவட்ட கிராம சேவை அலுவலர் சங்க வருடாந்த பொதுக் கூட்டம் இம்மாதம் 6ம் திகதி யாழ் சென்ஜோன்ஸ் கல்லூரி மண்டபத்தில் சங்கததலைவரும், தும்பளை கிராம சேவை அலுவலருமான திரு வி சேதுநாயகம் தலைமையில் நடைபெறவுள்ளது

யாழ். அரசாங்க அதிபர் திரு எம். பஞ்சலிங்கம் யாழ் மேலதிக அரசாங்க அதிபர் திரு எஸ் இராமநாதன் யாழ், தலைமைக்காரியாலய உதவி அரசாங்க அதிபர் திரு: எஸ் கோபாலரத்தினம் ஆகியோர் இக்கூட்டத்தில் பிரதம விருந்தினர்களாகக் கலந்து கொள்கின்றனர்.

அண்மையில் இளைப்பாறிய யாழ் மேலதிக அரசாங்க அதிபர் திரு எஸ் பற்றிக் யாழ் மாவட்டகிராம சேவை அலுவலர் சங்க முன்னாள் தலைவரும், இளைப்பாறிய கிராம சேவை அலுவலருமான திரு எம். ஒப்பிலாமணி ஆகியோரின் சேவைநலன் பாராட்டு விழாவும் அன்றையதினம் நடைபெறுமெனவும் சங்கத் தலைவர் தெரிவித்தார்.

## பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

அளவெட்டி அருணோதயக் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்புவிழாவைபவம் நாளை புதன் மாலை நடைறெும். இவ்விழாவிற்கு பிரதம விருந்தினராக பிரதம கல்வி அதிகாரி திரு. வெ சபாநாயகமும், சிறப்பு விருந்தினராக வைத்திய கலாநிதி ஜெயதேவி கணேசமூர்த்தியும் கலந்துகொள்வார்கள்.

## கும்பாபிஷேகம்

[மாவிட்டபுரம்]

பிரசித்திபெற்ற குப்பிளான் கற்கரைக்கற்பக விநாயகர் மகா கும்பாபிஷேகம் மிகசிறப்பாக நடைபெற்றது.

கும்பாபிஷேகக் கிரிகைகளை தொடர்ந்து 5 நாட்கள் ஆலய தேவஸ்தானக் குருவான சிவஸ்ரீ. ந. இராஜாராமக் குருக்கள் சிவஸ்ரீ. சி குமாராஜக்குருக்கள் உட்பட 10க்கு மேற்பட்ட குருமாரின் உதவியுடன் சிறப்பாக நடாத்தி வைத்தார்.

## பாடசாலை அபிவிருத்திசங்க நிர்வாகிகள்

(கொழும்புத்துறை)

யாழ் சென்ஜேம்ஸ் மகா வித்தியாலயத்தின் அபிவிருத்தி சபை வருடாந்தப் பொதுக் கூட்டம் மகாவித்தியாலய அதிபர் திரு அ. ஸ்ரனிஸ்லாஸ் தலைமையில் நடைபெற்றது பின்வருவோர் புதிய நிர்வாகிகளாகத் தெரிவுசெய்யப்பட்டனர்:-

தலைவர் திரு. அ. ஸ்ரனிஸ்லாஸ். உபதலைவர் திரு. மனுவேற்பிள்ளை, செயலாளர் திரு. ஏ. பிலிப், உபசெயளார் திருமதி. ஜே. எம். ஜெயச்சந்திரா; பொருளாளர் அருட்செல்வி எம். பாஸ்கல், எண் பார்வையாளர் திரு. எம். சந்தியா.

# வவனியாவில் பாதிக்கப்பட்ட பயிர்களுக்கு காப்புறுதி!

(வவனியா)

வவனியா மாவட்டத்தில் கடந்தபோகத்தில் வெள்ளம், வறட்சி, காட்டுமிருகங்களினால் ஏற்பட்ட அழிவிற்கு நஷ்டஈடாககாப்புறுதிசெய்யப்பட்ட பயிர்களுக்கு நாலு இலட்சத்து 44 ஆயிரத்து 720 ரூபா வழங்கப்பட்டுள்ளது

பயிர்ப் பாதுகாப்பு காப்புறுதி சபையின் வவனியா பிராந்திய உதவி பணிப்பாளர் திரு. கே. மகேந்திரன் இத்தகவலை கூறினர்.

ஐந்து இலட்சத்து 54 ஆயிரத்து 270 ரூபாவுக்கு மேற்படி சபையினால் நஷ்டஈடுகோரப்பட்டதாகவும், ஆனால் மேற்குறித்தொகைப்பணமேசிபாரிசு செய்யப்பட்டுள்ள தாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

செட்டிகுளம், உறுக்குளம், மடுக்கந்த, கோவில்குளம் ஓமந்தை, பம்பைமடு. கனகராயன்குளம், நெடுங்கேணி கமநல சேவைப்பிரிவு பகுதிகளில் ஏற்பட்ட அழிவிற்கே கமத்தொழில்காப்புறுதிச்சபை பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு அதுவும் பயிர்களுக்கு காப்புறுதிசெய்யப்பட்டவர்களுக்கு மட்டுமே அழிவிநஷ்டஈடுவழங்கப்பட அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்று திரு. மகேந்திரன் தெரிவித்தார்.

# கடை உடைக்கப்பட்டு கொள்ளை

(வவனியா)

வவனியா நகரில் கடந்த செவ்வாய் இரவு முஸ்லீம் வர்த்தகர் ஒருவருடைய கடை உடைக்கப்பட்டு சிறுதானிய வகைகள் பெருமளவு திருடப்பட்டுள்ளது.

39,345 ரூபா பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டவை என வவனியா பொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளது.

24 மூடை உழுந்து. 3 மூடை எள்ளு, ரொக்கப்பணம் 3570 ரூபா இன்னும் சிலபொருள்களும் இக்கடையில் திருடப்பட்டுள்ளது

கடையின் பிரதான கதவு பூட்டுஉடைக்கப்பட்டு திருட்டு நடைபெற்றுள்ளது வவனியா பொலிசார் விசாரணையினை மேற்கொண்டுள்ளனர்.

# யாழ்தேவி விபத்தில் வயோதிபர் பலி!

[மாவிட்டபுரம்]

யாழ்தேவி ரயில் 'லாண்ட் மாஸ்ரர்' வாகனத்தை மோதியதில் வயோதிபர் ஒருவர் ஸ்தலத்திலேயே பலியானார்.

மேற்படி சம்பவம் நேற்று முன்தினம் அதிகாலை 6 மணியளவில் மல்லாகத்தில் இடம் பெற்றது. மயிலிட்டியைச் சேர்ந்த முருகன் காசி(60வயது) என்பவரே இவ்விபத்தில் பலியானவராவர்.

மல்லாகத்திலுள்ள பாதுகாப்பற்ற புகையிரதக் கடவைப்பகுதியில் வெங்காயம் ஏற்றிவந்த 'லாண்ட் மாஸ்ரர்' என்ஜின் கோளாறு காரணமாக அந்த இடத்திலேயே நின்றுவிடவே அப்போது காங்கேசன்துறையிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்துகொண்டிருந்த யாழ்தேவி ரயில் வாகனத்தை மோதியபோது வாகனம் சேதமடைந்ததுடன் வயோதிபரும் பலியானார்.

மேற்படி சம்பவத்தில் சாரதி உட்பட 4 பேர் தெய்வாதீனமாக உயிர்தப்பினர்.

## கசிப்பு, கள் உற்பத்தியாளருக்கு

# சீவல் தொழிலாளர் ஒன்றியம் விடுத்துள்ள கோரிக்கை

(சாவகச்சேரி)

''கசிப்பு உற்பத்தியாளர்களே சட்ட விரோத கள்உற்பத்தி, விற்பனை செய்யும் தனி முதலாளித்துவ சுரண்டல் சக்திகளே எமது கூட்டுறவு வளர்ச்சியை தடைசெய்ய முயற்சிக்காதீர்'' என்று சாவகச்சேரி சீவல் தொழிலாளர்கள் நலன்புரி ஒன்றியத்தினால் வெளியிடப்பட்டுள்ள ஒரு துண்டு பிரசுரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

''இன்றைய சீரற்ற அசாதரண கால நிலையை கருத்திற் கொண்டு சில சுரண்டல் சக்திகள் தொழிலாளரது ஒன்றுபட்ட அமைப்பை உடைக்கவும் தொழிலாளரை தவறான வழிகளில் வழிநடத்தி குறுகிய வழியில் லாபம் தேடவும் முயற்சிக்கின்றன. இந்த நிலை எமதுஒன்றுபட்ட தொழிலாளர்களது அமைப்பை சீர்குலைப்பதாகவே அமையும் தனி முதலாளித்துவ சுரண்டல் சக்திகளே பலன் பெற வழி சமைக்கும் எனவே கூட்டுறவு அமைப்புக்குஎதிராகவுள்ள கசிப்பு உற்பத்தி, கசிப்பு விற்பனை, களவாக மரம் சீவுதல், களவாகக் கள்ளு விற்றல் போன்ற செயல்களைக் கைவிடவும், தடுத்து நிறுத்தவும் அனைவரையும் ஒன்றுபட்டு உழைக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம்'' என்று அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரா)

# புதிய நிர்வாகிகள்

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் ஞானவைரவர் கோவில் நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவாகியுள்ளனர்.

தலைவர் திரு. சு. சுந்தரம், உபதலைவர் திரு. க. வல்லிபுரம் செயலாளர் திரு. செ. சின்னத்துரை உபதலைவர் திரு.மு ஐயாத்துரை, பொருளாளர் திரு க. ரஞ்சிதானந்தன், கணக்குப்பரிசோதகர் திரு. கே. ச. சின்னையா மற்றும் 15 பேர்கொண்ட நிர்வாகிகள் தெரிவாகியுள்ளனர்.

# விளையாட்டுத் துறைக்கு பணிபுரிந்தவர்



உடுவில் கிழக்கைச் சேர்ந்த சிறந்தவிளையாட்டு வீரரான திரு. ஆ சிவநாதனின் பிரிவு விளையாட்டுத் துறைக்கு ஒரு பேரிழப்பாகும்.

பதுளை, ஊர்காவற்துறை, கல்முனை, யாழ்ப்பாணம். கொழும்பு ஆகிய இடங்களில் மாநகரசபைகளில் எழுதுவினைஞராக சேவையாற்றிய போது தமது கடமையை திருப்திகரமாகச் செய்து பலரது பாராட்டுதல்களையும் நன்மதிப்பையும் பெற்றிருந்தார்

கேகாலை சென்றமேரீஸ் கல்லூரியில் ஆரம்பக்கல்வியை பெற்ற இவர் உயர்கல்வியை சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் தொடர்ந்தபோது அங்கு விளையாட்டுத்துறையில் முதன்மைபெற்று கல்லூரிக்குப் பெருமைதேடித்தந்தார். ஓட்டப்போட்டி, கரப்பந்தாட்டம் உதைபந்தாட்டம், சைக்கிள் ஓட்டம் ஆகிய போட்டிகளில் ஈடுபட்டு பலவெற்றிகளை ஈட்டினார் ஊர்காவற்றுறை உதயதாரகை விளையாட்டுக் கழகத்தின் தலைவராக இவர் பணிபுரிந்தபோது தனது கழகத்தின் சார்பில் உதைபந்தாட்டம் கரப்பந்தாட்டம் போட்டிகளிலும் பங்கு பற்றி பலவெற்றிகளைப் பெற்று விளையாட்டுத்துறையின்வளர்ச்சிக்கு பெருமளவில் உதவினார்.

இத்தகைய ஒரு சிறந்தவிளையாட்டு வீரரைவிளையாட்டுத் துறை இன்று இழந்து நிற்கிறது.

கணேஸ்

# வவனியாவில் நான்கு குளங்கள் புனரமைப்பு

[வவனியா]

வவனியா மாவட்டத்தில் உள்ள நான்கு குளங்கள் பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து புனரமைக்கப்படவுள்ளன.

இவ்வருட முடிவிற்குள் திருத்தவேலைகள்இடம்பெறும்

கொந்தகாரன்குளம், நொச்சிக்குளம், வைரவமூன்றுமுறிப்பு. தவசிக்குளம் ஆகிய மூன்று சிறுநீர்ப்பாசன திட்டங்களும் புனரமைக்கப்படும் என வவனியாதிட்டமிடல் அதிகாரி திரு. ரீ. துரைசிங்கம தெரிவித்தார்.

# ஷண்முகார்ச்சனை

(யாழ்ப்பாணம்)

வண்ணை அருள்மிகு ஸ்ரீசெந்தில் கதிர்வேலாயுத சுவாமி கோவிலில் இன்று காலை ஸ்நபனாபிஷேகமும, நியாசபூர்வ ஷண்முகார்ச்சனையும், மாலை சந்தனக்காப்புச் சாத்தப்பெற்ற செந்தில் குமரனுக்கு நியாசபூர்வ ஷண்முகார்ச்சனையும் வசந்தமண்டப பூஜையும் நடைபெறும்.


## பேர்லின் பிரயாணம்

JULY 5, 8. 12, 15, திகதிகளில் பிரயாணம் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. நிச்சயமான திகதி மாற்றமில்லாத பிரயாணம்.

யாழ்-கொழும்பு-பங்கொக் வரை

எமது பிரதிநிதி உங்களுடன்.

★ கொழும்பில் தங்குமிட வசதி.
★ பிரயாண காசோலை.
★ பாஸ்போட். பொண்ட், விசா அனைத்துக்கும்

லிப்ருஸ் லிமிட்டெட்,

R. G. பில்டிங், 70,ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

COLOMBO

LIBRAS LTD.
PAUL VI CENTRE,
24, FRONT STREET,
COLOMBO-1


# மின் இயந்திரங்களும், அவற்றோடு சம்பந்தப்பட்ட உபகரணங்களும் விற்பனை

1. கீழே காணப்படும் மின் இயந்திரங்களுக்கும், அவற்றோடு சம்பந்தப்பட்ட உபகரணங்களுக்குமான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் என்னால் 03-07-1985ம் திகதி, காலை 10-00 மணியிலிருந்து 24-07-85ம் திகதி நண்பகல் 12-00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.
2. மேலே குறிக்கப்பட்ட பொருட்களைக் காரியாலய நேரங்களில் காலை 9-00 மணியிலிருந்து மாலை 3-00 மணி வரைசம்பந்தப்பட்ட உபஅலுவலகங்களில் 03-07-1985ம் திகதியிலிருந்து 23-07-1985ம் திகதி வரை பார்வையிடலாம்.
3. கேள்விப் பத்திரங்கள் மாவட்ட செயலாளர், காரியாலயத்தில் கேள்விப் பத்திரத்திற்கான ரூபா 50/-யையும், திருப்பிப்பெறக்கூடிய பிணைப்பணமாகியரூபா5,000/-யும் செலுத்துவதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம். பிணைப் பணம வங்கி ஆணை மூலம் செலுத்தப்பட வேண்டும். வங்கி ஆணை ''மாவட்டச் செயலாளர், அபிவிருத்திச் சபை முல்லைத்தீவு'' என்ற பெயருக்கு எழுதப்பட்டிருக்க வேண்டும்.
4. அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் பதிவுத் தபால் மூலம் செயலாளர், அபிவிருத்திச்சபை, முல்லைத்தீவு என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும். அல்லது இதற்காக மாவட்டச் செயலாளர், அபிவிருத் சபை, முல்லைத்தீவுக் காரியாலயத்தில் வைக்கப்பட்டு உள்ள கேள்விப் பெட்டியில் இடப்படல் வேண்டும்.
5. கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் ''மின் இயந்திரங்களும், சம்பந்தப்பட்ட பொருட்களுக்குமான கேள்விகள்'' என குறிப்பிட்டிருத்தல் வேண்டும்
6. கிடைக்கப்பெற்ற கேள்விகள் முல்லைத்தீவுக் கச்சேரியில் அமைந்துள்ள எனது காரியாலயத்தில் 24-07-1985ம் திகதி பி. ப. 2-00 மணிக்குத் திறக்கப்படும்.
7. தெரிவு செய்யப்பட்ட கேள்விக்காரர் அறிவித்தல் கிடைத்த ஒருவார காலத்திற்குள் செலுத்தப்பட வேண்டிய முழுத்தொகையையும், வங்கி ஆணை மூலம் மாவட்டச் செயலாளர் காரியாலயத்தில் செலுத்துதல் வேண்டும். வங்கி ஆணை, மாவட்டச் செயலாளர், மாவட்ட அபிவிருத்திச்சபை, முல்லைத்தீவு என்ற பெயருக்கு எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.
8. ஏலம் செய்யப்பட்ட பொருட்கள் தெரிவுசெய்யப்பட்ட கேள்வியாளர்களுக்கு, வங்கி ஆணைக்கான பணம் கிடைக்கப்பெற்ற பின்னரே கொடுக்கப்படும்.
9. தெரிவுசெய்யப்பட்ட கேள்வியாளர் கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களை என்னால் அறிவிக்கப்பட்ட திகதியிலிருந்து இரண்டு வார காலத்திற்குள் எடுத்துச் செல்லல் வேண்டும்.
10. தெரிவுசெய்யப்பட்ட கேள்விக்காரர் அவரால் கோரப்பட்ட முழுத் தொகையையும் செலுத்தத் தவறும் பட்சத்திலும், குறிக்கப்பட்ட காலத்திற்குள் கேள்விப் பொருட்களை எடுத்துச் செல்லத் தவறும் பட்சத்திலும் அவரால் செலுத்தப்பட்ட பிணைப்பணம் மீளளிப்புச் செய்யப்படமாட்டாது.
11. மாவட்டச் செயலாளர், இக்கேள்விகள் சம்பந்தமாக எந்தவொரு கேள்வியையோ, அல்லது முழுக் கேள்வியையோ எவ்வித காரணமும் காட்டாமல் இரத்துச் செய்யும் அதிகாரமுடையவராவார்.
12. முள்ளியவளை உப அலுவலகம்:
   - (அ) 38 எச் பி . 34 கே டபிள்யூ சக்தி கொண்ட லிஸ்டர் இயந்திரங்களும், சுவிஸ்போடும் — இரண்டு, அம்பிளிவயர் மீட்டரும், கிலோவோட் மீட்டரும் சேர்த்து.
   - (ஆ) ஆயிரம் கலன் டீசல் தாங்கி — ஒன்று.
13. முல்லைத்தீவு பட்டின உப அலுவலகம்:
   - (அ) பிளக்ஸ்ரோன் என்ஜின் - 75 கே டபிள்யூ சுவிஸ் போடு, ஓ சீ பி. 150 வோல்ஸ் மீற்றர், கில்லோகிரைம் மீட்டர், அம்பியஸ் 0—151 ஏ முன்வழி மீற்றர் (3 எச். பி. ஸ்ராட்டர் ஏயர்கொம்பிரஸ் சிலிண்டருடன். — ஒன்று
   - (ஆ) லிஸ்ரர் என்ஜின் 26 கே. டபிள்யூ — இரண்டு
   - (இ) டோமன் என்ஜின் 49 '' — ஒன்று
   - (ஈ) ஆயிரம் கலன் டீசல் தாங்கி — ஒன்று
   - (உ) 1200 கலன் டீசல் தாங்கி — ஒன்று
   - (ஊ) 60 கலன் '' '' — இரண்டு
   - (எ) 25 கலன் '' '' — நான்கு
   - (ஏ) 400 கலன் '' '' — ஒன்று
   - (ஐ) டோமன் ரில்சற்ட் என்ஜின்களுக்கான உதிரிப்பாகங்கள்.

அ. ஜெ. செந்தில்நாதன்,
செயலாளர்,
மா. அ. சபை.

செயலாளர் அலுவலகம்,
மாவட்டச் செயலகம்,
முல்லைத்தீவு. 4121
19-06-85.

**மொடேர்ண்**
மினி சினிமா
[ஸ்ரீலங்கா அச்சக லேன் ராஜா தியேட்டருக்கு அருகாமை]
Daily 10-30, 2-30, 4-30
TANYAS-ISLAND

**வெலிங்டன்**
10-30 — 2-15 — 4-15
Victory At Entabbe
விமான நிலையத்தில் பணயக்கைதிகளை விடுவித்த உண்மைத் திகிலூட்டும் சம்பவம்.

**லிடோ** சினிமா
10-30 — 2-30
பாண்டியன் — ரேவதி நடித்த
'புதுமைப் பெண்'
(ஈஸ்ட்மன் கலர்)

**பவித்ரா மினி**
கஸ்தூரியார் வீதி
(யாழ். இந்துக்கல்லூரியடி.)
1-7-85
Honest Nest
அப்பாவிமக்களை கொன்று குவித்த அட்டூழியர்களை பலிவாங்கும் இளைஞர்களின் கதை. யாவரும் கண்டிப்பாக பார்க்க வேண்டிய படம்.

**தேவி மினி**
சினிமா
(வின்ஸர் அருகாமை)
30-6-85 தொடக்கம்
காலை 10.30 -2 -4 -6 PM.
"X RAY"
திகில் மர்மம் நிறைந்த சித்திரம்

S. T. L. மினிசினிமா
(நாச்செக்வேலி)
காட்சி 10-30 1-30
சிவாஜி - பத்மினி
**தங்கப்பதுமை**
4-30 PM.
ஜேம்ஸ் பொன்ட்
Never Say Never Again
பயங்கர சண்டைக் காட்சிகள் நிறைந்த படம்

**மேபெயர் மினி**
(Mayfair)
10-30 2-30
விஜயகாந்த் அனுராதா
**இது எங்க பூமி**
4.30 p. m.
WHERE EAGLES DARE

**கொலம்பியா மினி**
(நாவலர் வீதி) நவலர் சந்திக் கருகாமையில்
2 மணிமுதல்
எம். ஜி. ஆர், சிவாஜி இணைந்து நடித்த
**கூண்டுக்கிளி**
மாலை 4-45 மணிமுதல் பயங்கர கராட்டி நிறைந்த ஆங்கிலத் திரைப் படம்

**ஸ்ரான்லி மினி 'A'**
10-30, 12-15, 2-15 4-15
First Blood
பொலிசாரின் பிடியிலிருந்து தப்பிய ஒரு கைதியின் பழிவாங்கல் கதை

**ஸ்ரான்லி மினி 'B'**
10-30, 2-30
கமல் - ஊர்வசி
**அந்தஒரு நிமிடம்**

**நியூசாந்தி (மினி)**
(யாழ். சாந்தி சினிமாவில்)
10-30, 12-30, 2-30, 4-30P.M
Michael Samuel
George Harrel
in
"The First Turn On"
(Strickly for Adults)
(கண்டிப்பாக வயதுவந்தவர்களுக்கு மட்டும்)

**ராஜா** தியேட்டர்
யாழ்ப்பாணம்
Daily 10-30, 2-30, 4-30 p. m.
48 HOURS
(color)
(Adults only)
விறுவிறுப்பூட்டும் சண்டைகள் நிறைந்த படம்.

யாழ். நகரில் முதன்முதலாக ''மினிசினிமாவை'' ஆரம்பித்தவர்களால் நடாத்தப்படும்
**உஷா மினி**
(கே. கே. எஸ் வீதியில் முட்டாசுக்கடை சந்திக்கும், கடைப்பிள்ளையார் கோவிலுக்கும் மத்தியில்)
தினசரி 10-30, 2-00, 4-30
BRUCE LEE ... in
FIST OF FURY III
பிரத்தியேகமாகத் தருவிக்கப்பட்ட கராட்டி சண்டைப் படம்

**வின்ஸர்**
வெண்திரையில்
தினசரி 10-30, 2-30
GANDHI
காந்தி அடிகள்
மகாத்மாகாந்தி அடிகளின் உண்மையான வாழ்க்கை வரலாற்றைச் சித்தரிக்கும் ஓவியம், பல கோடி டாலர்கள் செலவில் தயாரிக்கப்பட்ட பிரமாண்டமான படைப்பு. முதன்முறையாக யாழ்நகரில் காண்பிக்கப்படும் புதிய வெளியீடு.

**லதா மினி**
(கொண்டாவில்)
10-30, 3-30, 6-30
கமல், ஸ்ரீபிரியா
**நீயா**
பாம்பின் பழிவாங்கும் கதை

**குமரன்** மினி சினிமா
(67, ஸ்ரான்லி வீதி)
புதிய வெளியீடு
10-30, 2-30
மோகன், ஊர்வசி, ராதிகா
**தெய்வப்பிறவி**


## பாடசாலை பெற்றோர் தின விழா

[மாவிட்டபுரம்]

அளவெட்டி வடக்கு அமெரிக்க மிஷன் தமிழ் கலவன் வித்தியாலய பரிசளிப்பு விழாவும், பெற்றோர் தினவிழாவும் இம்மாதம் 4-ம் திகதி நடைபெறவிருக்கிறது

மேற்படி வித்தியாலய அதிபர் திரு தளையசிங்கம் தலைமையில் நடைபெறும் இவ் விழாவில் பரிசளிப்பு பேருரையை யாழ். கல்வி அதிகாரி திரு. கே. கந்தசாமி வழங்குவார் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி பரிசில் வழங்குவார்.

சிறப்பு விருந்தினர்களாக பண்டிதர் க. நாகலிங்கமும் திரு மு. திருநாவுக்கரசும் கலந்து கொள்வார்கள்.

## இன்றைய பலன்

மாதம் - ஆனி.
திகதி 18 (2-7-1985)
செவ்வாய்
திதி-பூரணை முன்னிரவுவரை
நக்ஷத்திரம் - மூலம்-பிற்பகல் வரை.

மேடம்: இதயத்தில் பூரிப்பு இன்பத்தின் சாயலுடன் இல்லறமும் சிறக்கும், கரும்பு போல்இனிக்கும் காரியங்களும் உண்டு.

இடபம்: பல வழிகளாலும் பணம் செலவாகும். நண்பர்கள் சகவாசத்தால் சிக்கல்களில் மாட்டிக்கொள்ள நேரிடும். நடுநிலைமை நன்று.

மிதுனம்: மோதவரும் பகை மோசடிகள் நடக்கும். சகோதர வழியால் சஞ்சலம் ஏற்படலாம். அதிக சிந்தனைக்கு இடம்கொடாது இருக்கவும்

கடகம்: துள்ளிவரும் வெள்ளிப்பணம் தொடர்புகளை பெருகவைக்கும் தள்ளி வைத்த மக்கள் உம்மை அள்ளி அணைத்திடுவர்.

சிங்கம்: இனம் தெரியாத கவலையால் சோர்வடைவீர்கள். வாய்வுப்பதார்த்தத்தை தவிர்த்துக்கொள்ளவும் பெரியவர் ஒருவரின் அறிவுரை ஆறுதல்தரும்.

கன்னி: நல்லதைச் செய்வீர்கள். நலன் பெருகும் பிரமுகர்கள் உங்களைத் தேடி வருவார்கள்.

துலாம்; விந்தையில் வெற்றிகாணும். வேண்டியது கிடைக்கும். பொதுமக்கள் தொடர்புடன் புகழ் வந்து சேரும்.

விருச்சிகம்; மெத்தவும் பொருள் சேரும் மேலிடத்து ஆதரவும் தப்பாமல் கிட்டும் தித்திக்கும் செய்தியுடன் மண வாழ்வும் உண்டு.

தனுசு: எண்ணங்கள் ஆயிரம் சிந்தையிலே வந்து உந்தும். ஏமாற்றம் தாக்கும். விந்தையான போக்கு வேடிக்கை காட்டும்.

மகரம்: குடும்பக் கவலையுடன் குறுக்குவழித் தலையீடு புதிர்போடும் வாழ்க்கையில் சோர்வுக்கு இடமுண்டு.

கும்பம்: இலட்சியப்பாதையில் வெற்றிநடை போடுவீர்கள் உயர் வட்டத்து அன்பும் அவசியம் கிடைக்கும்.

மீனம்: கற்றதனால் பயன் கைமேல் கிடைக்கும். அறிஞர்கள் போற்றுவர். ஆதரவு பெருகும.

திருமலை
வே. ரவீந்திரன்

## பூட்டான்...

(4ம் பக்கத் தொடர்ச்சி)

எது எப்படியானலும் பூட்டான் பேச்சுவார்த்தை ஆக்கபூர்வமான ஒரு நல்ல தீர்வுக்கு வழிவகுக்குமென்றும் நாட்டில் ''கிலி'' நீங்கி அமைதிக்கு வழிபிறக்குமென்றும் எதிர்பார்ப்போம்.

# "விளையாட்டுடன் சேர்ந்த கல்வியறிவு வேண்டும்"

## கல்விப் பணிப்பாளர் பேச்சு

[உடுவில்]

''யாழ்ப்பாணத்து மாணவர்கள் இன்றுமட்டுமல்ல, பல ஆண்டு காலமாகவே கல்வியில் சிறந்தவர்களாக விளங்கி வருகின்றனர். எத்தனையோ பல அறிஞர்கள் இப்பாடசாலையில் கல்வி பயின்றுள்ளனர். பல கல்விமான்களையும் சட்ட அறிஞர்களையும் உருவாக்கிய பெருமைபெற்றது இப்பாடசாலை. பல ஆண்டுகளுக்குமுன்னிருந்த நற்பெயரை மீண்டும் நிலைநாட்ட மாணவர்கள் முன்வர வேண்டும்.''

உடுவில் மான்ஸ் மகாவித்தியாலய வருடாந்த மெய்வல்லுனர் போட்டிகளுக்கு பிரதம அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றிய யாழ்ப்பாண மாவட்ட பிரதேசக் கல்விப் பணிப்பாளர் திரு. ம. சிமியாம்பிள்ளை மேற்கண்டவாறு கூறினர்.

விளையாட்டுப் போட்டிகளை உடற்கல்வி வட்டாரக் கல்வி அதிகாரி திரு. வ. கணேசலிங்கம் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்துவைத்தார்.

பாடசாலை அதிபர் திரு. வி. நடராஜன் வரவேற்புரை நடத்தினர். யாழ்ப்பாண கல்விப் பணிப்பாளர் திரு. ம. சிமியாம்பிள்ளை தமது சிறப்புரையில் மேலும் கூறியதாவது:

''மாணவர்கள் கல்வி கற்றதோடு உடற்பயிற்சிகளிலும் ஈடுபடவேண்டும். உடற்பயிற்சிப் போட்டிகளை நடாத்துவதன்மூலம் மாணவரிடையே போட்டிமனப்பான்மையை தோற்றுவித்து அது கல்வி பயிலவும் வாய்ப்பளிப்பதாக அமையமுடியும். உடலுறுதியுடன் சேர்ந்த கல்வி அறிவுதான் நீண்ட நாட்களுக்கு நிலைத்துநிற்கும். எனவே சகல மாணவர்களும் சிறுவயதிலிருந்தே தமது ஆரம்பக்கல்வியுடன் சேர்த்து விளையாட்டுக்களிலும் ஈடுபட்டு பயிற்சிபெற முயல வேண்டும்''

மானிப்பாய் தொகுதி முன்னள் பாராளுமன்ற உறுப்பினர் திரு. வி. தர்மலிங்கம் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றினர்.

விளையாட்டுப் போட்டிகளில் வெற்றியெற்றவர்களுக்கு திருமதி ஜே. சிமியாம்பிள்ளை பரிசில்களை வழங்கினர்

## கல்விப் பணிக்கு நாளெல்லாம் உழைத்தவர்

யா/கீரிமலை நகுலேஸ்வர மகாவித்தியாலயத்தின் உருவாக்கத்திற்குக் காரணமாயிருந்த திரு. வ. கந்தையா அவர்கள் தமது ஆரம்ப காலத்தில் இளவாலை மெய்கண்டான் வித்தியாசாலையில் ஆசிரியராகக் கடமையாற்றியவர் பெரியோர்களின் வேண்டுகோளுக்கிணங்கச் சம்பளத்தையும் எதிர்பாராது தனது பதவியை இராஜினமாச் செய்துவிட்டு தமது ஊரான கருகம்பனைக்கும் கீரிமலைக்கும் இடையே பல கிராமப் பிள்ளைகளும் சென்று கற்கக்கூடியதான ஓர் கொட்டில் பாடசாலையாக 40 பிள்ளைகளுடன் நகுலேஸ்வரா வை ஆரம்பித்தார்

அடுத்த வருடத்திலேயே ஊர்மக்கள் உதவியுடன் ஓர் பெரிய மண்டபத்திற்கு அத்திபாரமிட்டார். தமது அயரா முயற்சியினல் அக்கட்டிடத்தை விரைவாகக் கட்டி பாடசாலையின் வளர்ச்சியில் கண்ணுக இருந்தார் பாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்று நடாத்தியதன் காரணமாகக் கல்வி பல பாடசாலைகளில் பாதிக்கப்பட்ட போதும் இப்பெரியாரின் நிர்வாகத் திறமையால் துரிதமாகப் பிறர் வியக்கத்தகு முறையில் முன்னறியது நகுலேஸ்வர அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையேயான நாடகப்போட்டிகளில் பல கல்லூரிகளுடன் போட்டியிட்டு முதனிடம் பெறவைத்தார் அகில இலங்கைப் பாடசாலைகளுக்கிடையே அரசாங்கம் நடாத்திய விவசாயப் போட்டியில் தொடர்ந்து இரண்டாண்டுகள் முதலிடம் கிடைத்தது மேலும் விவகானந்த சபையின் பேச்சுப் போட்டிகள் சமயப்பரீட்சைகள். தமிழ்மறைக்கழகத் திருக்குறள் போட்டிகள் ஆகியவற்றில் பலபதக்கங்கள் பெற்றமையும் அவரின் விடாமுயற்சியாகும்

இவர் அகிலஇலங்கைத்தமிழ் ஆசிரியர் சங்கத்திலும் தொடர்ச்சியாகப் பொறுப்பான பதவிகளை வகித்துச் சிறந்த தொண்டுபுரிந்தார்.

திரு வ கந்தையா 1981-ம் ஆண்டு மார்கழி மாதத்தில் தமது சிறப்பான ஆசிரிய சேவையிலிருந்தும் இளைப்பாறிய அன்னர் அயராது உழைத்து 31-5-1985 இல் அமரத்துவம் அடைந்தார். இவரது சேவை என்றும் நிலைத்துப் பயன்தருவதாகும்.

—த. இராமசாமி.

## வீதி திருத்தம்

(மண்டைதீவு)

போக்குவரத்து வசதியீனத்தை ஏற்படுத்தும்வகையில் பலகாலம் சீர்குலைந்து கிடந்த மண்டைதீவு-அல்லைப்பிட்டி இணைப்பு வீதி வாகனப் போக்குவரத்துக்கு ஏற்றவகையில் மண்டைதீவுப் பொதுமக்களினல் சிரமதானம் மூலம் திருத்தியமைக்கப்பட்டுள்ளது.

பரவைக்கடலை ஊடறுத்துச் செல்லும் இப்பாரிய வீதியில் அமைந்திருந்த பாலங்களும் இச்சிரமதானத்தின் மூலம் திருத்தியமைக்கப்பட்டன.

பெருந்தெருக்கள் திணைக்களத்தினல் போடப்பட்ட இவ்வீதி பலமாத காலமாகச் சீரற்ற நிலையில் இருந்து வந்ததால் பொதுமக்கள் பெரிதும் கஷ்டமுற்றுவந்தனர் இதைத் தொடர்ந்து அல்லைப்பிட்டி-மண்டைதீவு வாகனப்போக்குவரத்து மீண்டும் இவ்வீதியால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

# மரண அறிவித்தல்

## சுப்பிரமணியம் குமாரசுவாமி

நல்லூரைச் சேர்ந்த காலஞ்சென்ற திரு. வி சுப்பிரமணியத்தினதும் திருமதி சுப்பிரமணியத்தினதும் மகனும், லீலாவதியின் அன்புக் கணவரும், ஜானகியின் தந்தையும், மயிலிட்டியைச் சேர்ந்த காலஞ்சென்ற திரு ச செல்லத்துரையினதும் திருமதி செல்லத்துரையினதும் மருமகனுமாகிய திரு. சு. குமாரசுவாமி 22-6-85 சனிக்கிழமை கனடாவில் காலமானர். அன்னரின் ஈமக்கிரியைகள் கனடாவில் நடந்தேறின. உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளும்படி வேண்டுகிறோம்.

தகவல்: திருமதி தெய்வானைப்பிள்ளை செல்லத்துரை
நகைசட்டியோடை, மயிலிட்டி.
4147

# நயினாதீவு தேர் உற்சவம் சிறப்பாக நடந்து முடிந்தது!

[ வேலணை நிருபர் இ. சற்குருநாதன் ]

[வேலணை]

நயினாதீவு நாகபூஷணி அம்மன் கோவிலின் வருடாந்த ரதோற்சவம் நேற்றையதினம் 1-ம் திகதி திங்கட்கிழமை மிகச்சிறப்பாக நடந்தேறியது சூழ்நிலை சாதகமாக இல்லாத போதும் பக்தர்களின் தொகை அதிகமாகக் காணப்பட்டது.

யாழ்ப்பாணத்திலும் மற்றும் வெளியூர்களிலிருந்தும் குறிக்காட்டுவான் துறைமுகத்திற்குச் சென்ற யாத்திரிகர்கள் எவ்வித பரிசோதனையுமின்றி நேராக நயினாதீவு நாகபூஷணியம்மன் கோவிலுக்கு முன் உள்ள துறைமுக இறங்கு மேடைக்கு கொண்டு சென்று இறக்கப்பட்டனர். ஆலயவீதிகளுக்கோ துறைமுக மேடைக்கோ ஆயுதப்படையினர் வரவில்லை

சப்பரத்திருவிழாவான இரவு ஆலயத்திற்குச் சென்ற யாத்திரிகர்களுக்கு இரவு ஆலய வடக்கு வீதியில் உள்ள கலியாண மண்டபத்தில் படுக்கை வசதிகள் செய்து கொடுக்கப்பட்டிருந்தன பல யாத்திரிகர்கள் தங்களுக்குத் தெரிந்தவர்களான நண்பர்கள் உறவினர் வீடுகளிலும் இரவைக் கழித்தனர்.

ஆலய நிர்வாகிகள் பாதுகாப்பு, குடிதண்ணீர், சுகாதார வசதிகளை ஏற்பாடுசெய்திருந்தனர் நயினாதீவு மகாவித்தியலய சாரணர்கள், நயினாதீவு பொலிஸ் பொதுமக்கள் நல்லுறவுக்குழு, சென் ஜோன் அம்புலன்ஸ்படையினர், நயினாதீவு பொதுஸ்தாபனப் பிரதிநிதிகள், அனலைதீவு ஐயனார் ஆலய தொண்டர் குழு ஆகியன பாதுகாப்புச் சேவையிலும், தொண்டர் சேவையிலும் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர்.

யாழ். நகரில் இருந்து செல்லும் யாத்திரிகர்களின் வசதி கருதி வடபிராந்திய போக்குவரத்துச் சபையினர் 4-க்கும் அதிகமான பஸ்களை சேவைக்கு அமர்த்தியிருந்தனர். இத்துடன் தனியார் வாகனங்களும் சேவையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தன. படகுச் சேவைகளும் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தாலும் 13 படகுகள் மட்டுமே சேவையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தன.

இவ் வருட ரதோற்சவம் சென்ற வருடங்களைப் போல் அல்லாது ஒருமணிநேரம் தாமதித்தே நடைபெற்றது. இத்தாமதம் பற்றி நிருபர் அறங்காவல் சபைத்தலைவர் திரு.நா. சிவராசசிங்கத்திடம் கேட்டபோது இவ் வருடம் யாத்திரிகர்களின் வரவை எதிர் பார்த்தே இவ்வித ஏற்பாட்டை செய்ததாக கூறினர்.

ரதோற்சவ தினத்தன்று ஆலயத்திற்குச் சென்ற பெண்மணி ஒருவரின் தங்கச்சங்கிலியை களவாடியதாக ஆனைக்கோட்டையைச் சேர்ந்த ஒருவரின் மீது குற்றஞ்சாட்டப்பட்டு நயினாதீவில் தற்காலிகமாக அமைக்கப்பட்டுள்ள நீதிமன்றத்தில் வழக்கு விசாரணை நடைபெற்றது.

ஊர்காவற்றுறை மாவட்ட நீதிமன்ற நீதிவான் திரு.பொ. பாலவடிவேல் விசாரணை செய்து எதிரியைக்குற்றவாளியாக கண்டு நூறு ரூபா அபராதம் விதித்தார்.

கோவிலின் மேற்கு வீதியில் கிராமசபைக் காரியாலயம், சாரணர் அலுவலகம், கிராம சேவையாளர் காரியாலயம், சுகாதார காரியாலயம், மாவட்டநீதிமன்றம் ஆகியன அமைக்கப்பட்டு இயங்கிக் கொண்டிருந்தன. இக்காரியாலயம் எதிர்வரும் 3-ம் திகதி வரை தற்காலிகமாக இங்கே இயங்கிவரும். யாழ். மாவட்ட பொதுசனத்தொடர்பு அதிகாரி திரு. த. குலசேகரம் பிள்ளை, வேலணை உதவி அரசாங்க அதிபர் செல்வி மைதிலி சே. மசுந்தரம் ஆகியோர்கள் அடிக்கடி துறைமுகமேடைகளுக்கும் ஆலய வீதிகளுக்கும் சென்று யாத்திரிகர்களின் நலன்களை அவதானித்து வருவதில் ஈடுபட்டுக் கொண்டிருந்ததுடன் படகுச் சேவைகள், வாகனசேவைகள் எவ்வாறு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதில் கவனம் செலுத்திக் கொண்டிருந்தனர்

அமுதசுரபி அன்னதான சபையினரால் வழமைபோல இவ்வருடமும் அன்னதானம் வழங்கப்பட்டது.

இவ்வருட உற்சவகாலத்தில் சுமார் (7) ஏழாயிரம் வரை தலி யாத்திரிகர்கள் வருகை தந்திருப்பார்கள் என மதிப்பிடப் பட்டிருக்கின்றது.

## மீண்டும் இயங்குகிறது

(இறுப்பிட்டி)

புங்குடுதீவு எரிபொருள் நிரப்பு நிலையம் மீண்டும் இயங்க ஆரம்பித்துள்ளது முன்னர் டீசல், பெற்ரோல் உட்பட சகல பொருட்களும் இல்லாத காரணத்தினால் பல மாதங்களாக மூடப்பட்ட நிலையில் இருந்தது சிலரின் முயற்சியினால் மீண்டும் இயங்க ஆரம்பித்துள்ளது.

## இன்று பதவியேற்பு

(யாழ்ப்பாணம்)

உடுவில் உதவி அரசாங்க அதிபராகக் கடமையாற்றிய திரு. ஏ வி. செபநாயகம் மன்னார் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபராக இன்று 2-7 85 முதல் பதவியேற்கிறார்

இதேவேளை யாழ். கச்சேரியில் நிர்வாக உத்தியோகத்தராகக் கடமையாற்றிய திரு எஸ் இராஜரத்தினம் உடுவில் உதவி அரசாங்க அதிபராக இன்றுமுதல் பதவியேற்கிறார்


## மரண அறிவித்தல்

### திருமதி சிவகாமிப்பிள்ளை சுப்பிரமணியம்

கொல்லங்கலட்டியைச் சேர்ந்த திருமதி சிவகாமிப்பிள்ளை சுப்பிரமணியம் காலமானார் இவர் சுப்பிரமணியம் (மலேயன் பென்சனர்) அவர்களின் அன்பு மனைவியும், சண்முகலிங்கம் (ஓய்வுபெற்ற வானிலை அவதான நிலைய அதிகாரி), திருமதி சனகாம்பிகை கனகரத்தினம், திருமதி ஞானம்பிகை இரத்தினகுமார், செல்வி யோகாம்பிகை (இராமநாதன் கல்லூரி) ஆகியோரின் அருமைத் தாயாரும், திருமதி ருணு ரவீந்திரன் (U.S.A.), திருமதி தர்மசாந்தினி சேதிலிங்கம், சிறீஸ்கந்தா (சவுதி அரேபியா), சிறிநிவாசன் (பேராதனை), திருமதி மாதினி விக்னேஸ்வரன் (நைஜீரியா), திருவரங்கன் (Bahrain, திருக்குமார் (சென்னை), தயாளினி (விக்டோறியாக் கல்லூரி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், பிரபு சங்கரன், ரவீனவின் பீட்டியுமாவர். அன்னாரின் பூதவுடல் 27-6-85 வியாழன் பி ப 3. மணியளவில் கீரிமலை மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. 4118


## இந்திய விமானப்படை தலைவர் மரணம்

(புதுடில்லி)

இந்திய விமானப்படைத் தலைவர் திரு. ஏர்ஷித் மார்ஷல் லட்சுமன் மாதேவ் காத்திரி நேற்று புதுடில்லியில் மாரடைப்பினால் காலமானார் என்று அறிவிக்கப்பட்டது.

இறக்கும் போது இவருக்கு வயது ஐம்பத்தெட்டாகும் திடீரென்று ஏற்பட்ட நோய் காரணமாக இராணுவ ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்ட இவர் அங்கு நேற்று மரணமானார். (து)

## பூதவுடல்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டபத்தில் நடந்த இறுதி ஆராதனையைத் தொடர்ந்து காலை 9-45 மணிக்கு பூதவுடலைத் தாங்கிய பேழை ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டது.

பேழையின் மீது கல்லூரிக் கொடி போர்த்தப்பட்டிருந்தது. மண்டபத்திலிருந்து மண்டப வாசல்வரை பூதவுடல் தாங்கிய பேழையை ஆசிரியர்கள் சுமந்துசென்றனர் வாசலில் யாழ். பிரஜைகள் குழுவினர், வை எம் சி ஏ உறுப்பினர், பழைய மாணவர் ஆகியோர் பேழையை ஏற்று கல்லூரி வாசல்வரை சுமந்துசென்றனர்.

வாசலில் பூதவுடல் தாங்கிய பேழை வாகனத்தின் மேல் வைக்கப்பட்டு பிரதான வீதி, பழைய பூங்கா வீதி, கண்டி வீதிவழியாகக் கல்லூரியைச் சுற்றி ஊர்வலம் நடைபெற்றது

ஊர்வலத்தின் முன்னால் அதிபர் ஆனந்தராஜனின் பெரிய அளவிலான படமொன்று எடுத்துச் செல்லப்பட்டது கனிஷ்ட மாணவர்கள் நூற்றுக்கு மேற்பட்ட மலர் வளையங்களைத் தாங்கிச்சென்றனர் இதனைத் தொடர்ந்து கல்லூரி உயர் வகுப்பு மாணவர்கள் சீருடையுடன் அணிவகுத்துச் சென்றனர். பின்னால் சீருடையுடன் மாணவிகள் சென்று கொண்டிருந்தனர். பூதவுடலைத் தாங்கிய பேழையைக் கொண்டுசென்ற வாகனத்தின் முன்னால் பழைய மாணவரும், பெற்றோரும், ஆசிரியர்களும் சென்றுகொண்டிருந்தனர்.

வாகனத்தின் பின்னால் குடும்பத்தினரும் உறவினரும் அதனைத் தொடர்ந்து பெண்களும் ஆண்களும் ஊர்வலத்தில் சென்றுகொண்டிருந்தனர்.

கல்லூரி 'பாண்ட்' வாத்தியக் கோஷ்டியும், வாகனத்தின் முன்னால் சென்றுகொண்டிருந்தது. வாகனத்தின் முன்சென்ற மாணவர்கள் மலர்களைப் பூதவுடல் தாங்கிய பேழைமீது சொரிந்தவண்ணம் சென்று கொண்டிருந்தனர்.

சமூகத்தில் பல்வேறு துறையைச் சேர்ந்த மக்களும் இந்த ஊர்வலத்தில் காணப்பட்டனர் பாடல்களை இசைத்தபடி ஒரு குழுவினரும் சென்று கொண்டிருந்தனர்

மெதுவாக வீதிகளைச் சுற்றி வந்த ஊர்வலம் காலை 10-45 மணிக்கு சேமக்காலையை வந்தடைந்தது. அங்கு நின்ற மக்கள் அஞ்சலி செலுத்தினார்கள். காலை 11 மணிக்கு நல்லடக்கம் செய்யப்பட்டது.

## சுகாதார அமைச்சின் ஒன்றிணைக்கும் திட்டம்

(மாவிட்டபுரம்)

ஆரம்ப சுகாதார சேவையையும், வைத்தியசேவையையும் ஒன்றிணைக்கும் சுகாதார அமைச்சின் திட்டம் நேற்று முதல் அமுலுக்கு கொண்டு வரப்பட்டது.

இதுவரை காலமும் ஆரம்ப சுகாதார சேவைகளை சுகாதார வைத்திய நிலையங்களும், வைத்திய சேவைகளை வைத்தியசாலைகளும் மக்களுக்கு அளித்து வந்தன.

சுகாதார அமைச்சு மேற்கொண்டுள்ள புதிய திட்டத்தின்படி இரு சேவைகளும் ஒன்றிணைக்கப்படவிருக்கிறது.

இப்புதிய திட்டத்தின்படி காங்கேசன்துறையில் இயங்கி வரும் சுகாதார வைத்தியநிலையமும், தெல்லிப்பளை அரசினர் வைத்தியசாலையும் ஒன்றிணைக்கப்பட்டு தெல்லிப்பளையில் மாவட்ட சுகாதார நிலையம் என்னும் புதிய அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

## இவர்களுக்கு நிவாரண உதவிகள் வேண்டும்

[யாழ்ப்பாணம்]

நெடுந்தீவு-குறிக்காட்டுவான் பிரயாணிகள் படகில் இடம் பெற்ற கொலைச் சம்பவத்தின் போது, கொலைசெய்யப்பட்ட அமயந்தர அரசாங்க ஊழியர்களுக்கு, அரசாங்க உத்தியோகத்தர்களுக்குரிய சகல நிவாரண உதவிகளும் கிடைக்க வழிசெய்யுமாறு நெடுந்தீவுப் பிரஜைகள் குழு, அரசதிணைக்கள கூட்டுத்தாபன-ப.நோ. கூ., ச. அதிகாரிகளைக் கேட்டுள்ளது.

கடந்த மே 15-ம் திகதி குமுதினிப்படகில் பிரயாணம் செய்த அப்பாவி மக்கள் 35 பேர் கொல்லப்பட்டும் 28 பேர் படுகாயங்களுக் குள்ளானதும் தெரிந்ததே.

பிரஜைகள் குழு விடுத்துள்ள கோரிக்கை வருமாறு:

குமுதினிப் படகில் கடமையாற்றிய அறுவரில் ஐந்து பேர் கொல்லப்பட்டார்கள். திரு அந்திரேசு அந்தோனிப்பிள்ளை, திரு. ஞானப்பிரகாசம் தேவசகாயம்பிள்ளை ஆகிய இருவரும் சிறந்த கடலோடிகள். எல்லோராலும் பாராட்டப்பட்ட இவர்கள் பெருந்தெருக்கள் திணைக்களத்தால் முறையே 1956 லும், 1972 லும் நியமனம் பெற்றவர்கள். படகுச் சிப்பந்திகளான திரு. குமாரவேலு கனகலிங்கம், திரு. வைத்திலிங்கம் சதாசிவம், திரு. தில்லைநாதன் ஆகியோரும் நெடுந்தீவின் அரசினர் வைத்தியசாலைத் தொழிலாளியான தொம்மன் நாகேந்திரன், யாழ்ப்பாணம் கச்சேரி உதவி உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரியின் உணவுக் களஞ்சிய சாலை, ஊர்காவற்றுறையில் காவலாளியாகக் கடமையாற்றிய திரு. வேலுப்பிள்ளை கந்தையா, யாழ். கச்சேரியைச் சேர்ந்த ஊழியர் திரு. ஐயன் சின்னையா ஆகிய அனைவரும் நீண்டகாலமாக அரசாங்க ஊதியத்தை நம்பியே வாழ்ந்தவர்கள். எமது ஆய்வின்படி இவர்களுக்கு அதிக பிள்ளைகளும், மேலும் குடும்ப பொறுப்பும் உள்ளவர்களாக இருக்கின்றார்கள். நிரந்தரமாக வசிப்பதற்கே வீடற்றவர்கள், திக்கற்றவர்களாகிவிட்ட இக்குடும்பங்களின் பரிதாப நிலையை உணர்ந்து சம்பந்தப்பட்ட திணைக்கள அதிகாரிகள் தம்மாலான முழு முயற்சியையும் பிரயோகித்து முதல் நியமனத் திகதிகளில் இருந்தே நிரந்தரமாக்கி அரசாங்க உத்தியோகத்தர்களுக்குரிய சகல நிவாரணங்களும் கிடைக்கவழிசெய்யுமாறும், இந்த சம்பவத்தில் கொலைசெய்யப்பட்ட அரசாங்க, கூட்டுத்தாபன, ப. நோ. கூ. சங்க உத்தியோகத்தர்கள், ஓய்வூதியம் பெறுவோர்களுக்கான சகலநிவாரணங்களை உடன் கவனத்தில் கொண்டு செயற்படுமாறும் சம்பந்தப்பட்ட சகல திணைக்கள, கூட்டுஸ்தாபன, ப நோ கூ. சங்க அதிகாரிகளை நெடுந்தீவு பிரஜைகள் குழு மிக வினயமாகக் கேட்டுள்ளது. [மா]

## திருமதி நாயுடம்மா காலமானார்

(புதுடில்லி)

கடந்த 23-ம் திகதி அத்திலாந்திச் சமுத்திரத்தில் வெடித்துச் சிதறிய இந்திய விமானத்தில் பயணம் செய்த உயிர்நீத்தவர்களில் ஒருவரான இந்திய விஞ்ஞானி டாக்டர் நாயுடம்மாவின் மனைவி திருமதி பவனம்மா நாயுடம்மா (வயது 60) நேற்றுக் காலமானார்.

திருமதி பவனம்மா நாயுடம்மா கடந்தவாரம் தீக்காயங்களுக் குள்ளாகியதால் சென்னை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவந்தார்.

அமெரிக்காவிலிருந்து வரவழைக்கப்பட்ட மாற்றுத் தோல் பொருத்தும் சிகிச்சை உட்பட விசேஷ மருந்துகளின் மூலம் அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டும்கூட அது பலனளிக்காமல் நேற்றுக் காலை அவர் மரணமானதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (து)

## சீமெந்துத்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஜுவாலையுடன் தீ எரிந்தது தொழிலாளர்கள் தீ ஏனைய இடங்களுக்கு பரவவிடாமல் அணைக்க முயற்சி எடுத்தனர். அருகில் இருக்கும் அலுவலகங்களில் இருந்து பொருட்கள், முக்கிய தஸ்தாவேஜுக்கள் அப்புறப்படுத்தப்பட்டன.

ரயர்களின் பெரும் பகுதி எரிந்ததுடன் அருகில் இருந்த சில அலுவலகங்களும் சேதமடைந்தன. பிரதான மின் இணைப்புக்கள் பழுதடைந்ததால் மின் தடைப்பட்டு தொழிற்சாலை வேலைகள் ஸ்தம்பிதமடைந்தன.

இன்று காலை படையினர் மேற்படி டயர் குவியல்களில் ஒருபகுதியை தம் உபயோகத்துக்கென தம் வாகனங்களில் ஏற்றிச் சென்றதாக தெரிவிக்கப்பட்டது.

தீவிபத்தையடுத்து இராணுவத்தினர் ஸ்தலத்துக்கு விரைந்து வந்தனர் ஹெலிகாப்டரும் தாளப்பறந்த வண்ணம் இருந்தது.

இப்பகுதி ஒரே புகைமண்டலமாக காட்சியளித்தது.

## 17 பேர் கொலையாம்

[கொழும்பு]

'யுத்த நிறுத்தம்' அறிவிக்கப்பட்டதின் பின்னர் 17 அப்பாவித் தமிழர்கள் தமிழ்த் தீவிரவாதிகளினால் கொல்லப்பட்டுள்ளனர் என இலங்கை அரசு அறிவித்துள்ளது.

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்க அச்சகத்தில் 1985-ம் ஆண்டு ஜுலை மாதம் 2-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது Registered as a News Paper at the General Post Office, Sri Lanka under number B 100236/81 Eelanadu P.Box 49, Telegram Eelanadu, Telephone; 22389, 24126.